# அன்னை கஸ்தூரி



V. PR. PL. R.
WANATHAN CHETTIAR
PASANERI.

அல்லயன்ஸ்

218

# அன்னை கஸ்தூரி

ஆ303

பாபு ராஜேந்திரப் பிரசாத், காங்கிரஸ் சரித்திரம்,
ஜான்ஸி ராணி லக்ஷ்மீபாய், சுவாமி ராம
தீர்த்தர், மகாதேவ கோவிந்த ரானடே
முதலிய நூல்களின் ஆசிரியர்

**எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்**

இயற்றியது

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

இளைஞர் தமிழ்ச் சங்கம்
பாகனேரி.

அறிவே விளக்கு
அல்லயன்ஸ்

**அல்லயன்ஸ் கம்பெனி**

மயிலாப்பூர் :: :: சென்னை

காபிரைட் ] 1944 [அணா 12

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | ... | 1 |
| 2. | பாலப் பருவம் | ... | 9 |
| 3. | குடும்ப வாழ்க்கை | ... | 13 |
| 4. | உப்பும் பருப்பும் | ... | 23 |
| 5. | ஊன் மருந்து | ... | 28 |
| 6. | எங்கே போவேன்? | ... | 37 |
| 7. | நகைப் பூசல் | ... | 42 |
| 8. | தவங்கிடத்தல் | ... | 47 |
| 9. | தாயின் திருவாசகம் | ... | 56 |
| 10. | ஊருக்குப் பிறந்தவர் | ... | 58 |
| 11. | கடைநாள் காட்சி | ... | 62 |
| 12. | ஆவி பிரிதல் | ... | 74 |
| 13. | சுமங்கலி | ... | 81 |
| 14. | இரங்கல் உரைகள் | ... | 85 |
| 15. | குறிப்புகள் | ... | 88 |
| 16. | முடிவுரை | ... | 97 |



ராஜன் எலெக்டிரிக் பிரஸ்,
சென்னை—(1944920.211.)

# அன்னை கஸ்தூரி

## முன்னுரை

**மோ**கனதாஸ் காந்தி மனிதப் பிறவி: ஆயினும் அவரை மகாத்மா என்கிறோம்; மகான் என்று அழைக்கிறோம்; தெய்வப்பிறவி என்று பேசுகிறோம். ஏன்? வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன், வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும், என்கிறார் திருவள்ளுவர். ஒழுக்கம் நிறைந்த இல்வாழ்வான் விழுப்பம் நிறைந்த தெய்வமாகவே மதிக்கப்படுவான்.

மனிதரிலே மனிதருண்டு, மனிதரிலே தேவருண்டு என்பர் பெரியோர். இதற்கு நடத்தையே காரணம். காந்தி மகான் வாழ்க்கை அனைவருக்கும் ஓர் எடுத்துக்காட்டு. அத்தகைய வாழ்க்கைக்கு உடனிருந்து உதவுகிறவளே மனைவி. ஆதலின் மனைவியை வாழ்க்கைத் துணை என்பர் சான்றோர். "இல்லதென் இல்லவள்

மாண்பானால்?" என்பது தமிழ் வேதம். அந்த இல்லாள் அகத்திருக்க, இல்லாத தொன்று மில்லை என்றாள் ஔவையும்.

மகாத்மா காந்தி மகா பாக்கியசாலி. ஆதலின், அவருக்கு ஏற்ற இல்லாள் வாய்த்தாள். அவர் இனிய இல்லறம் நடத்தினார்; இல்லறத்தில் இருந்துகொண்டே துறவறமும் நடத்தினார்; தூய புருஷராகத் துலங்கினார்; தேசமெல்லாம் புகழ்பெற்றார்; கண்கண்ட தெய்வம் என்றும் கும்பிடு கொண்டார்; கண்ணியன், புண்ணியன் ஆனார். இவ்வளவுக்கும் மனையாள் ஒரு பக்க பலம். 'அவள் என்னை இயக்குகிறாள், வேறெவரும் அவ்வாறு இயக்க இயலாது' என்று ஓரிடத்தில் அந்த உத்தமர் உரைத்துள்ளார்.

தாரமும் குருவும் தலைவிதி என்பர். நிதியும் கணவனும் விதியின் பயன் என்பர். கருத்தொருமித்த, காதல் நிரம்பிய, உடல் இரண்டு ஆனால் உயிர் ஒன்றே என்னும் கணவன் மனைவியர் வாய்த்தல் அருமை! ஏன், அருமையினும் அருமையாம்! தம்பதிகளின் தன்மையை உணர்த்தவே, அர்த்தநாரீசுவரனாக ஆண்டவன் விளங்குகின்றான் போலும். ஆனதுபற்றியே திருமாலும் தன் தேவியை மார்பகத்தே வைத்தான் போலும்; மலரவனும் நாவினிலே மனைவியை இருத்திக்கொண்டனன் போலும்!

காந்தியும் கஸ்தூரியும் அங்ஙனம் அறுபதாண்டு வாழ்ந்துவந்தனர்; உயிர் ஒன்றேயென ஒன்றியிருந்தனர்: முடிவிலே பூனா நகரில்

ஆகாகான் மாளிகைஎன்னுமிடத்தே காவலிலும் ஒருமித்துக் கிடந்தனர். அந்தோ! அம்மாதராள், மங்கையர்க்கு அரசியார், மகாத்மாவின் மனைவியார், காந்தியடிகளின் வாழ்க்கைத் துணைவியார், வாசுகிபோல் வாழ்ந்துவந்த புனிதவதியார், சென்ற சிவராத்திரி தினத்தன்று (1944-ஆம் வருஷம், பிப்ரவரி மாதம் 22-ந்தேதி) ஈசன் பாதம் சேர்ந்துவிட்டார்.

உடல் இரண்டாயினும், உயிர் ஒன்றேயல்லவா? ஆதலின் கஸ்தூரி கண்மூடியது கண்டவுடனே, மகாத்மா காந்தியின் கண்ணிலும் நீர் தோன்றியது. இல்லறத்திலே துறவறங் கொண்டவர் அப் பெரியவர்; சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாகப் பிரமசரிய விரதம் பூண்டவர்; காதல் நினைவே கனவிலும் கொள்ளாதவர். அத்தகையவருக்கும் கண் கலங்கியது. இந்நிலையில் திருவள்ளுவரை நினைத்தல் வேண்டும்.

திருவள்ளுவரே தமிழ்மறை பாடியவர். அம்மறையை எம்மதத்தாரும் சம்மதமெனவே கொள்வர்; செய்தொழிலையெல்லாம் சீர்தூக்கி, இம்சைக்கு இடமற்ற நெய்தல் தொழிலைக் கொண்டவர்; பிறருக்குப் போதித்தவண்ணம், இம்மியும் பிறழாமல் நடந்து காட்டியவர்; தேவாதி தேவர்களெல்லாம் வந்து, அடிதொழப் பெற்றவர். அத்தகைய மகா ஞானவானும் வாழ்க்கைத் துணைவியான வாசுகியம்மையை இழந்ததும், "பேதையே! போதியோ?" என்று புலம்பல் ததும்பும் உரை பகர்ந்தார்.

அடிசிற்கினியாளே! அன்புடையாளே!
படிசொல் கடவாத பாவாய்!—அடிவருடிப்
பின்தூங்கி முன்னெழுந்த பேதையே! போதியோ?
என் தூங்கும் என்கண் இரா

என்பதே வாசுகியம்மை பிரிந்த காலத்தில் திருவள்ளுவர் அழுதிரங்கி அருளிய பாடல். இதனால் அம்மையின் விழுமிய குணங்களெல்லாம் உணரப்படும். வள்ளுவனார் வாய்விட்டழுதார். மகாத்மாவோ வாய்திறந்து அழவில்லை; கண்ணீர் வடிக்கவுமில்லை; தோன்றிய கண்ணீரையும் தோன்றாவண்ணம் அடக்கிக் கொண்டார். எனவே ஒரு வகையில் வள்ளுவரையும் காந்தி மகான் மிஞ்சிவிட்டார் என்னலாம். பாசமும் பக்குவமும் அவரவர் தகுதிக்கேற்பத் திகழும். பிறர் உற்றுநோக்கி உணர்தல் கடினம்.

வாசுகியம்மையின் உயிர் தொண்டைக் குழியிலே துடித்துநின்றது; உடலைவிட்டோடத் துணியவில்லை; தழுதழுத்தது; தயங்கியது. பார்த்தார் வள்ளுவனார். கணவனது கட்டளையின்றி இம் மண்ணுலகை விட்டேக அந்த அம்மை விரும்பவில்லை! "பெண்மணே! பேதுறல் ஏன்? பிரியுங் காலம். நிம்மதியாகச் செல் " என்றார் அத்தெய்வப் புலவர். பின்னரே அப் பெண்பாவின் உயிர் அகன்றது.

அங்ஙனமே சிவராத்திரியன்று மாலை ஏழு மணிக்கு நம் அன்னை கஸ்தூரிக்கு நெஞ்சுக் குழியில் சுவாசம் துடித்து நின்றது. காலையிலேயே மருத்துவ வல்லார் பலரும், இனிமேல்

விநாடிக் கணக்கேதான் என்று முடிவு கட்டி விட்டனர். எனினும் கதிரவன் மறையும் வரையில் கஸ்தூரியின் உயிர் அகலவில்லை. பார்த்தார் மகாத்மா; தாழக் குனிந்து "அம்மா! துடிப்பு ஏன்? நிம்மதியாக ஈசன் பாதம் சேர்வாயாக" என்று அருளினார். பின்புதான் கஸ்தூரி அன்னையின் உயிர்த் துடிப்பு ஒடுங்கியது. சிறிது விநாடிக்கெல்லாம் விமலன் பாதம் சேர்ந்தார் கஸ்தூரிபாய்.

உறங்குவது போலும் சாக்காடு, உறங்கி விழிப்பது போலும் பிறப்பு என்று தமிழ் மறை முழங்கும். மனிதருக்கு இறப்பும் பிறப்பும் இயற்கை. இரண்டையும் தடுத்தல் இயலாது. எனினும் இறப்பின் காலமும் இடமும் சமயமும் சந்தர்ப்பமும் கவனிக்கத்தக்கன. கஸ்தூரி அன்னை கண் மூடியது எங்கே? சிறைக் கூடத்தில்! காலம் எத்தகையது? தேசம் முழுதும் சோற்றுக்கின்றித் தவிக்கும் காலம்! அன்புரை கூறுவார், ஆறுதல் அளிப்பார், தேறுதல் உரைப்பார் இல்லாத காலம்! மாதாவை இழந்த சிசுவைப்போல், தேச மக்கள் தம் தலைவர்களை உயிருடன் இழந்து உருகி நிற்கும் காலம்!

சமய சந்தர்ப்பம் யாது? தேசத்திலே படையெடுப்பு பீதி; அவசரச் சட்ட அலங்கோலம்; பொறுப்பற்ற ஆட்சி முறையின் அனர்த்தம்; மீகாமனில்லா மரக்கலம்போல் தேச நலபலத் தத்தளிப்பு!

"நடக்கும் உலக மகாயுத்தம் சத்தியத்தையும் சுதந்தரத்தையும் நிலை நாட்டவா! அங்ஙனம் ஆனால் அன்னியருக்கு அடிமைகளாக வாழோம். சரிசமானமான புருஷராகவே துலங்குவோம். எனவே சுதந்திரப் பேற்றை மறுக்காதீர்கள். தோழர்களாக நின்று தலை கொடுப்போம், தொண்டடிமையாக நின்று துயரப்படோம்" என்று தேசத்தின் சார்பாகத் தலைவர்கள் பேசிய சமய சந்தர்ப்பம்! இங்ஙிலையில் அவர்களுக்குச் சிறைவாசம்! எங்குளர் என்று உற்றார் உணரமுடியாத அந்தரங்கக் காவல்!

மதிள் இடிந்தால் கட்டலாம். மனம் இடிந்தால் கட்டமுடியுமோ? கஸ்தூரி அன்னையார் நோய்க்கு இரையானார் என்று தந்திகள் பேசும். என்ன நோய் அது? உடல் நோயா? மன நோயா? உடல் நோய்க்கு மருந்துண்டு. மன நோய்க்கும் அப்படித்தான். மனநோய்க்கு மருந்தூட்டாமல், உடல் நோய்க்கு மருந்தூட்டினால், குணமுகம் காணுமா? கிளியைப் பிடித்துக் கூண்டிலடைத்துப் பாலும் பருப்பும் சாதமும் சர்க்கரையும் முன்னே வைத்தாலும் என்ன? கூண்டைவிட்டு வெளியே கிளம்பி, வான வீதியில் உல்லாசமாகப் பறந்து திரியவே கிளி விரும்பும். அந்நிலையில் அதற்கு எத்தகைய உணவு கொடுத்தும் என்ன பயன்?

காந்தி தம்பதிகளின் சிறைத்தலம் ஆகாகான் மாளிகை என்பர் பிறர். உண்மையில் மாளிகையா அது? தோட்ட வீடு என்றுதான்

இசைக்கலாம். மாளிகை என்பது இடக்கரடக்கலே. காவல் தலத்தைச் சுற்றி நாற்புறமும் இரும்பு முள்வேலி! உருவின கத்தியும் கெட்டித்த துப்பாக்கியும் தாங்கிய வீரர். மாளிகையா அது? மனிதக் காற்று வீசக்கூடாது; உற்ருர் உறவினரைக் காணமுடியாது. கடிதப் போக்குவரத்துப் பற்றியோ கூற வேண்டியதில்லை. இங்கிலேயில் "பென்சிலின்" மருந்து என்ன செய்யும்? விமானத்தில் வந்தும் பயன்பட்டதா? அம்மருந்து சோற்றுச் சுவருக்குத்தானே? கம்பீரமான மனத்திஹுக்கு என்ன பயன் தரும்?

கைவிலங்கு, இரும்பால் ஆயினதால் என்ன? பொன்ஞல் ஆயினதால்தான் என்ன? விலங்கு விலங்குதானே? பொன்விலங்கிட்டதாகப் பெருமைபேசுதல் பொருந்துமோ? காவல் தலத்தில் கட்டுண்டு கிடக்க, யாது குற்றம் இழைக்கப்பட்டது? இன்ன குற்றம் என்று தகவல் உண்டா? கோர்ட்டுமூலம் விசாரணை உண்டா? பகிரங்கமான தீர்ப்புத்தான் உண்டா? அதிகாரி இட்டதே தீர்ப்பு, அப்படியே போடு தமுக்கு என்பது பழமொழி! வேறு என்ன விளம்புவது?

தாய் தன் பசிநோயை ஒரு பொருட்டாக எண்ணுள். குழந்தைகளின் பசிநோய் கண்டோ சகியாள். அங்ஙனமே கஸ்தூரி அன்னை தமது சிறைவாசம் கண்டு தளரவில்லை. ஆயிரக்கணக்கான மக்கள் - குற்றம் இன்னதென்று உணர்த்தப்படாத மக்கள் - விசாரணை ஏதுமின்றிக்

கட்டுண்டு கிடக்கும் மக்கள் - படும்பாடு கண்டு, கிடக்கும் நிலைகண்டு, வதங்கும் வாதனை கண்டு கஸ்தூரி மாதா சகிக்கவில்லை. யாது நினைத்தார் அத் தாயார்! மைந்தன் தேவதாஸ் மொழியும் வண்ணம்,

"நானும் என் கணவரும் ஆயுள் அளவும் சிறையிலேயே கிடக்கத் தயார். பிறரனைவரையும் விடுவித்தால் போதும்" என்றே நினைத்தார், ஏங்கினார், துடித்தார், பதைத்தார், பொருமினார், மனத்தூடே புலம்பினார்.

மண்ணுலகில் வாதாடிப் பயனில்லை. விண்ணுலகு சென்று வாதாடிப் பார்க்கலாம். முன்னதாக ஆஸாத் பேகம் போயிருக்கிறார், மகாதேவ தேசாயும் சென்றிருக்கிறார், விஜயலட்சுமியின் விழுமிய கணவரும் பயணமாகிவிட்டார், நாமும் செல்லுவோம், அன்னாருடன் இருப்போம், ஆண்டவனை நேரில் கண்டு வினவுவோம், பூலோகத்தில் கல்லாயும் செம்பாயும் கிடக்கிறீர்களே, பொன்னுலகில் எப்படிக் கிடக்கிறீர்கள், பார்க்கலாம் என்று புறப்பட்டுப் போயுள்ளார்.

அவரது அறுபதாண்டு வாழ்க்கைச் சரிதம், அனைவருக்கும் உழைத்த சரிதம், ஆண்டவனுக்கு உகப்ப நடந்த சரிதம், நானிலம் மெச்சும் சரிதம், நங்கையருக்கு வழிகாட்டும் சரிதம், நமனுருடன் வாதாடிய சரிதம், பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையான சரிதம் பேசுவோம் இங்கு.

## 2. பாலப் பருவம்

பெயரில் என்ன இருக்கிறது? என்பர் சிலர். எல்லாம் இருக்கிறது என்போம் நாம். கஸ்தூரி என்ன அழகான பெயர். பிரசவ காலத்தில் பெண்களுக்கு ஒரு சஞ்சீவி கஸ்தூரி. மேலும் கஸ்தூரி நறுமணம் வாய்ந்தது. ஈசுவரனைத் துதிக்கையில், கஸ்தூரி திலகன் என்போம். கஸ்தூரி என்ற சொல்லில் ஓர் இன்பம், ஓர் உயர்வு, தொனிக்கும்! நம் கதாநாயகி பெயரளவில் மட்டுமன்று, குணத்திலும் செயலிலும் கஸ்தூரியே!

பம்பாய் மாகாணத்திலே சிறிய சிறிய சமஸ்தானங்கள் பல உண்டு. அவற்றுள் ஒன்று போர்பந்தர். கஸ்தூரி அங்கே அவதரித்தார். காந்தி உதித்த தலமும் அதுவே. 1869-ஆம் ஆண்டு கஸ்தூரி பிறந்தார் இப்பூவுலகில். எனவே அவரது உலக யாத்திரை எழுபத்தைந்து வருஷம். மனிதருக்கு வயது நூறு என்பர். அது முன்னாளில். இந்நாளிலோ நாற்பது அல்லது ஐம்பதுக்கு மேலில்லை.

மேலும் இந்தியாவிலே மக்களின் சராசரி வயது 27 தான். இங்கிலீயில் 75 ஆண்டு ஜீவ தசையில் இருந்தது விசேஷமே. கர்ம பூமி இது. கருமம் (கடமை) புரியவே பிறக்கிறோம். சோற்றுப் புழுக்களாய்ச் சோபிப்பதற்கு அன்று.

உடலெடுக்கும் பயன் ஊருக்கு உழைப்பதாம். அவ்விதம் ஊழியம் புரிய - நெடுநாள் ஊழியம் புரிய - நம் கஸ்தூரி மாதா பாக்கியம் படைத்திருந்தார்.

போர்பந்தரிலே கோகுலதாஸ் மகந்தி ஒரு பெரிய வைசியர்; தானியங்கள், துணி, பருத்தி இவற்றில் வர்த்தகம் புரிந்தவர்; வைசியருக்கு ஏற்ற முறையில் வாழ்ந்தவர். அங்கே கரம்சந்த் காந்தி என்பவர் சமஸ்தான திவான்; சமர்த்தர், சம்பன்னர், குணசீலர். அவ்வர்த்தகரும் திவானும் உயிர்த் தோழர்; உள்ளன்பு படைத்தோர். தோழமையும் அன்பும் தலைமுறை தலைமுறையாகத் தழைக்கவேண்டுமென்று இருவரும் விரும்பினர். அப்போது கஸ்தூரிக்கு வயது ஏழுதான்.

அவ் விருப்பினை ஈடேற்றுவது எப்படி? வர்த்தகருக்கு ஸீமந்த புத்திரி கஸ்தூரி பாய். திவானின் சற்புத்திரர் மோகனதாஸ் காந்தி. தோழமையுடன் உறவையும் கூட்டி வைக்க ஏற்பாடு ஆயிற்று. வியாபாரியின் புத்திரியைத் திவானின் மைந்தன் மணந்துகொள்வது என்பது ஏற்பாடு. 1882-ஆம் வருஷம் நிச்சயதாம்பூலம் மாற்றிக்கொண்டனர் இரு பெற்றோரும். மணவினை அடுத்த ஆண்டில் மங்களமாக நடைபெற்றது.

மோகனதாஸ் காந்தியும் கஸ்தூரி பாயும் ஏறக்குறைய ஒரே வயது. இருவருக்கும் இரண்டு மூன்று மாதந்தான் வித்தியாசம்.

மாதக் கணக்கில் முதிர்ந்தவர் மோகனதாஸ். கடிமணம் நடந்த காலையில் இருவருக்கும் வயது பதின்மூன்று. அப்போது சாரதாச் சட்டம் இல்லை. பால்ய விவாகமே பிரபலம். பெற்றோர் பார்த்தே பெண்ணுக்கும் பிள்ளைக்கும் முடிச்சுப் போடுவர்.

கஸ்தூரிபாய் சுவடி தூக்கிப் பள்ளிக்கூடம் போனதில்லை. கேள்விப் படிப்புத்தான். பெற்றோரின் நடை உடை பாவனைகளும் பரம்பரை வாசனையுமே படிப்பு; வேறு இல்லை. பாட்டி கதையும் புராணப் பிரசங்கமுமே கேள்விச் செல்வமாயின. வர்த்தகரின் மகள் அல்லவா? புத்தி மிகுதி, விவேகமும் அதிகம். கல்யாணம் ஆனதும், கணவன் வீட்டுக்கு வந்தார் கஸ்தூரிபாய்.

கஸ்தூரியின் படிப்பைப்பற்றி மகாத்மா பேசுகிறார். "அவளுக்கு எழுத்து வாசனை கிடையாது. ஆகவே அவளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கவேண்டுமென்று எனக்கு ஆசை அதிகம். ஆனாலும் என்ன? எனக்கோ அவள்மீது காதலன்பு மிகுதி. எனவே படிப்பூட்ட நேரம் ஏது? மேலும் படிப்பில் அவளுக்கு அக்கறை இல்லை. அவளது விருப்பினுக்கு மாறாகவே நான் படிப்பூட்ட வேண்டும். அதுவும் இரவில்தான் முடியும்.

"வீட்டுப் பெரியவர்களின் முன்னிலையில் அவளைச் சந்திக்க எனக்குத் துணிவில்லை. எனவே எப்படிப் பேச முடியும்? அன்றியும்

அக்காலத்தில் அங்கே படுதா வழக்கம் அதிகம். பெண்கள் வெளியே போகக்கூடாது. படிப்புச் சொல்லிவைக்க நான் எவ்வளவோ ஆசைப்பட்டும், முயன்று பார்த்தும் பயனில்லை. எனக்கு விவேகம் முதிர்ந்து காமவிகாரமும் குறைந்த வுடனே, பொதுஜன சேவையில் புகுந்துவிட்டேன். இங்கிலேயில் எனக்கு அவகாசம் ஏது?

"வீட்டிலே வாத்தியாரை வைத்துச் சொல்லிக் கொடுக்கவும் தவறிவிட்டேன். ஆதலின், நிரம்பக் கஷ்டத்துடன் சாதாரணமான கடிதம் எழுதத்தான் கஸ்தூரிக்குத் தெரியும். கொஞ்சம் குஜராத்தி பாஷை வரும். இளமையில் என்னிடம் காதலன்பும் காமவிகாரமும் இல்லாமல் இருந்திருக்குமே யானல், கஸ்தூரிபாய் கற்றறிந்த காரிகையாக விளங்கியிருப்பாள்; படிப்பில் அவளுக்கு ஆர்வம் இல்லாதிருந்ததையும் ஓட்டியிருப்பேன். பரிசுத்தமான அன்புமட்டும் இருப்பின், ஆகாத காரியம் என்று ஒன்று உண்டோ?"

கஸ்தூரி அன்னைக்கு ஏட்டுப் படிப்பில்லை என்பது மெய்யே; என்றாலும் இயற்கையிலேயே குணநலங்கள் உண்டு. உதாரணமாக, அடக்கம், படாடோபமின்மை, விடாமுயற்சி இக்குணங்கள் மிக்கிருந்தன. உலக ஞானம், விவேகம் என்பார்களே; அது நிரம்ப உண்டு. பிறரைப் பார்த்தும் பெரியோர்களைக் கண்டும், கொண்ட சுயமான படிப்பினுக்கு ஒரு குறைவில்லை.

பெண்மதி பேதைமதியாம்? பெண்களையே பேதைகள் என்றும் சொல்லுவர் கஸ்தூரி பாயிடமோ பேதைமதி இல்லை. பெருமதி நிரம்பி நின்றது. எனவே பேதைப் பெண்ணாகத் துலங்க வில்லை. பெரியாரைக் கண்டால் பக்தி விசுவாசம் உண்டு. தெய்வங்களிடத்திலே கொண்ட பயபக்தி சொல்லிமுடியாது. மதத்தினிடமோ மகத்தான பற்று. "என்னுடைய மதபக்திக்கு அவளே காரணம். அவளையே சொல்லவேண்டும்'' என்று மகாத்மா கூறியுள்ளார்.

## 3. குடும்ப வாழ்க்கை

அன்பும் அறனும் உடைத்தாயின், இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது, என்று தேவர் குறள் பேசும். காந்தி-கஸ்தூரி தம்பதிகளின் இல்வாழ்க்கையே அத்திவ்ய மொழிக்கு ஓர் உதாரணம்.

மணவினை நடந்ததும், கணவன் வீட்டில் வசிக்கலானார் கஸ்தூரி அன்னை. ஓரோர் சமயந் தான் பிறந்தகம் போவதுண்டு. மேற் படிப்பை நாடி, மோகனதாஸ் மேனாடு சென்றபோது, கஸ்தூரிபாய் தம் புக்ககத்திலேயே இருந்தார். அப்போது அவருக்குக் கையிலே ஒரு சிசு இருந்தது. படிப்பு முடிந்ததும் காந்தி திரும்பி வந்து பாரிஸ்டர் தொழிலில் இறங்கினார். பின்னர் அவர் 1896-ஆம் ஆண்டு தென்னாபிரிக்கா செல்ல நேர்ந்தது. அப்போது கஸ்தூரிக்கு இரண்டு குழந்தைகள்.

பிரயாண சமயத்தில் காந்தி மகான் கருதியதும் நடந்ததும் இப்படி:—"நாகரிகம் வாய்ந்தவராகக் காணவேண்டின், ஐரோப்பியரைப் போல் இருக்கவேண்டுமென்று நம்பினேன். அவ்விதம் இருந்தால்தான், செல்வாக்கு ஏற்படும், செல்வாக்கில்லாமல் சமூகத் தொண்டாற்ற முடியாது என்று நினைத்தேன். என் மனைவியும் சரி, மக்களும் சரி, இன்னவாறு உடை கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தேன். காத்தியவாடைச் சேர்ந்த வைசியர்கள் என்றா அவர்கள் மதிக்கப்படுவது? இதற்கு நான் ஒப்பவில்லை.

"அந்நாளிலே பார்ஸியர்தாம் இந்தியரிலே மிக்க நாகரிகம் வாய்ந்தோர் என்று மதிக்கப் பட்டு வந்தனர். எனவே, ஐரோப்பிய உடையை மேற்கொள்வதினும் பார்ஸிய உடையை மேற்கொள்ளுதலே தகுமெனத் துணிந்தேன். அவ்வாறே என் மனையாள் பார்ஸிய சேலை தரித்தாள். என் பையன்களும் பார்ஸியரைப் போல் சாலங்கியும் மேலங்கியும் பூண்டனர். கால் ஜோடும் மேல்ஜோடும் இல்லாமலிருக்க முடியுமா?

"என் மனைவிக்கும் மக்களுக்கும் அந்தப் புதிய உடை ஒத்துக்கொள்ள நெடுநாளாயிற்று. கால் ஜோடோ பாதத்தை இறுக்கிக் கசக்கியது. மேல்ஜோடோ வியர்வையில் ஊறிற்று. கட்டை விரலிலே புண் உண்டாயிற்று. என்ன இது என்று மனைவியும் மக்களும் சலித்துக்கொண்டனர். ஆட்சேபங்களுக்கெல்லாம் உடனே தக்க

சமாதானங் கூறினேன். என் சமாதானங் கண்டு அவர்கள் திருப்தி யடைந்தனர் என்பதில்லை. என்னுடைய அதிகார மிடுக்கே அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டியது. விதியின்றிப் புதிய உடைக்கு அவர்கள் இறங்கினர்.

"சாப்பாட்டிலோ என்றால், முள் கரண்டியும் குத்துக் கரண்டியும் கத்தியும் அவர்கள் கையாள நேர்ந்தது. நாகரிக விஷயமாய் எனக்கு இருந்த மோகம் நீங்கிய பின்பு, கத்தியையும் குத்துக்கரண்டியையும் அவர்கள் கைவிட்டனர். நெடுநாள் புதிய பாணிக்கு ஆளாகிக் கிடந்த பின்னர், பழைய மோஸ்தருக்கு அவர்கள் திரும்புவதும் கஷ்டமாயிற்று. "நாகரிகத்தை"க் கைவிட்டபின்பு எங்களுக்கு இன்பமும் சுகமும் மிகுதி."

எப்பணியால் கணவர் இன்புறுவர், அவரை அப்பணியால் இன்புறுத்தவேண்டும் என்பதே அந்த அம்மையின் கருத்து. ஆதலின் கணவர் விரும்பிய வண்ணம், நாகரிக 'உடை கொண்டார்; சாப்பாட்டிலும் நாகரிக' வழியை மேற்பூண்டார்.

கஸ்தூரிபாய் எப்போதும் சுமுகமாகவே தோன்றுவார்; இனிய சொல்லே பகர்வார். கனிந்த வசனமே கூறுவார்; தன்னலம் என்பதைக் கனவிலும் கருதார்; தியாகம் என்றால், பெருந்தன்மையுடன் வீரமான தியாகம் செய்வார்; கணவர் வேறு, தான் வேறு என்று இல்லாமல் ஈருடலிலும் ஓருயிரே குடிகொண்டுள்ள

தாகக் கருதியவர். ஹிந்து மனைவிக்குரிய இலக்கணங்களெல்லாம் அவரிடம் ஒருங்கே பொருந்தியிருந்தன.

1914-ஆம் ஆண்டில் நேர்ந்த ஐரோப்பிய யுத்த சமயம், சேனைக்கு ஆள் திரட்டிச் சேவகம் புரிந்தார் மகாத்மா காந்தி. அப்போது அவருக்கு ஒரு நாள் வயிற்றுக்கடுப்பு கண்டது. பழரசத்தைத் தவிர, வேறெதுவும் புசிப்பதில்லை என்று எண்ணினார். அன்றே ஒரு பண்டிகை தினம். மத்தியானம் ஆகாரமே வேண்டாமென்றார் மனையாளிடம். பண்டிகையன்று கணவன் ஏதும் புசியாமலிருக்க, எந்த மனைவிதான் சம்மதிப்பாள்? ஆதலின் சிறிது சாப்பிடுங்கள் என்று கணவரை அன்புடன் கேட்டுக்கொண்டார். என்ன சொல்வார் மகாத்மா காந்தி. மனைவியின் அன்புரையில் ஈடுபடலானார். பாலோ பாலினாலான எதுவுமோ புசிப்பதில்லை என்று காந்தி சபதங் கொண்டிருந்தார். எனவே கோதுமைக் கஞ்சியொன்று, சர்க்கரை சேர்ந்த கோதுமைக் கஞ்சியொன்று, கஸ்தூரிபாய் தயாரித்தார் பிரத்தியேகமாக; காந்திக்கு ஒரு கோப்பை கொடுத்தார்.

அதன் பாகம் மிகவும் உருசியாக இருந்தது. அத்துடன் தேவியின் இன்னுரையும் கூடி நின்றது. சுவையான கோதுமைக் கஞ்சி என்றால், காந்திக்கு மிகப் பிரியம். மனைவியின் மனத்தை மகிழ்விக்கவேண்டியும், தம் நாவின் ஆசையைப் பூர்த்தி பண்ணவேண்டியும், கொஞ்சம் சாப்

பிட்டார் காந்தி. ஆனாலும் என்ன? நாவின் சுவை எனும் பேய் சும்மா விட்டதா? அவர் மீது பொங்கிப் பாய்ந்தது. வயிறு நிரம்ப அருந்தினார். சாவு எனும் தேவதையை அழைக்க வேறு தூது வேண்டாம். சிறிது நேரம் ஆனது தான் தாமதம். வயிற்றுக்கடுப்பு கடுமையாயிற்று.

பிறகு அவர் பெரிதும் வருந்தினார். பட்டினி கொண்டார்; டாக்டர் வந்து மேலுக்கு மருந்து கொடுத்தார். ஒருவாறு நோய் குணமாகியது. அன்பின் மிகுதியை அம்மையும் கட்டுப்படுத்தவில்லை, அப்பனும் கட்டுப்படுத்தவில்லை!

புலிபோல் பொறுமை பூண்டிருத்தல் பெண்களின் பூஷணமாம். கஸ்தூரி அன்னை அங்ஙனம் பொறுமை பூத்து நின்ற சம்பவமொன்று சாற்றுவோம், காந்தி மகான் தமது சத்திய சோதனையில் செப்பும் வண்ணம்.

"நான் ஓர் அன்பருடன் நேசம் பூண்டிருந்தேன். அவரோ என் மனைவிமீது நான் சந்தேகங் கொள்ளுமாறு பேசி வந்தார். நானோ மனைவியிடம் விசுவாசம் கொண்டிருந்த கணவன். அவள்மீது யாதொரு காற்றும் வீசக் கூடாது என்னும் கருத்துங் கொண்டவன். அந் நண்பரோ என் மனைவியின்மீது எனக்குச் சந்தேகம் பெருகுமாறு தூபம் போட்டுவந்தார். அவருடைய வார்த்தையில் எனக்கு அவநம்பிக்கை பிறக்கவில்லை. அவருடைய வார்த்

தையை நம்பி, அப்பப்பா, ஒரு தரமா, இரண்டு தரமா, என் மனைவிக்கு நான் மனத்துன்ப மூட்டியது!

"அத்தகைய கஷ்டங்களை யெல்லாம் ஹிந்து மனைவிதான் சகித்திருக்க முடியும். ஆதலினால்தான் சகிப்பின் அவதாரமென மாதரை நான் கருதலானேன். தப்பாக ஒரு பணியாளன்மீது நாம் சந்தேகங் கொண்டால், வேண்டாம் இந்த வேலை என்று அவன் நம்மை விட்டுப் போய்விட முடியும்; தனயனும் அங்ஙனமே தன் தந்தையின் வீட்டைத் துறந்தேகக் கூடும். நண்பனும் என்ன நேசமடா இது என்று விலகிவிட முடியும்.

"மனைவியோ தன் கணவன் நடத்தையில் சந்தேகம் கொண்டால், மௌனமாய்ப் பொறுத்திருப்பாள். கணவன் தன் மனைவியின் நடத்தை மீது சந்தேகங் கொண்டுவிடுவானாயின், அவள் கதி அதோகதிதான். அவள் எங்கே போக முடியும்? நீதி ஸ்தலத்திலே ஹிந்து மாதர் விவாக ரத்து வழக்குத் தொடுக்க முடியாது. சட்டம் அவளுக்குப் பரிகாரந் தேடிக் கொடுக்குமோ? கொடுக்காது. அத்தகைய நிலைமைக்கு என் மனைவியை நான் ஆளாக்கியதை நினைக்கையில், எனக்கு மன்னிப்பு ஏது?"

கஸ்தூரி அன்னையின் பொறுமையே பொறுமை! கஸ்தூரிக்கும் காந்திக்கும் மணவினையான சமயத்தில் அவர்களின் நேசபாசம் எவ்வாறு இருந்தது? காந்தி மகானே கூறட்டும்.

"கல்யாணம் ஆன புதிசு. கணவன் மனைவியரின் உறவைக் குறித்த துண்டுப் பிரசுரமொன்று படித்தேன். மனைவியிடம் விசுவாசமாயிருக்க வேண்டுமென்று கொண்டேன். மனைவியும் என்பால் விசுவாசம் வைக்கவேண்டுமென்று கருதினேன். அந்த விசுவாசம் காரணமாக, எதிர்பாராத இயல்பொன்று என்னிடம் உதிக்கலாயிற்று. என்பால் அவள் விசுவாசம் வைக்குமாறு கட்டாயப்படுத்த முயன்றேன். என் மனைவி என்மீது கொண்டுள்ள விசுவாசத்தை நான் சந்தேகிக்கவில்லை.

"என்றாலும் நான் சொன்னபடியே அவள் கேட்கவேண்டுமென்று நான் நினைத்திருந்தேன். அவளுடைய நடமாட்டங்களைக் கூர்ந்து கவனிக்கக் கருதினேன். என்னுடைய உத்தரவின்றி ஓரிடமும் போகக்கூடாதென்று பணித்தேன். இதனால் எங்கள் இருவருக்கும் இடையே கசப்பான சச்சரவு உதிக்கலாயிற்று. அவள் ஓரிடமும் போகக்கூடாதென்று நான் இட்ட கட்டளையோ அவளுக்கு ஒரு சிறைவாசம்போல் முடிந்தது. அவ்விதம் கட்டுண்டு கிடக்கும் பெண்ணெனப் பிரகாசிக்க கஸ்தூரி விரும்பவில்லை.

"தான் விரும்பிய இடத்தினுக்கு விரும்பிய போதெல்லாம் போகவே அவள் முடிவு கொண்டாள். நான் எவ்வளவுக்கு எவ்வளவு தடை செய்தேனோ, அவ்வளவுக்கு அவ்வளவு சுதந்தரம் கொள்ள அவள் முயன்றாள்.

எனக்கோ மேன்மேலும் கோபம் உதித்தது. அது காரணமாக நாங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் பேசாமல்கூட இருந்தோம். கணவர் சொன்னாரே, அதை மீறி நடக்கிறோமே என்ற பிரக்ஞை வரக்கூடிய வயசல்ல அப்போது கஸ்தூரிக்கு. அவள்மீது குற்றஞ் சுமத்துவதும் சரியன்று. ஆலயத்துக்குப் போகாமலோ, உற்றார் வீடு செல்லாமலோ தடுக்கப்பட்டால், ஒரு பாவமும் அறியாத பெண் எவ்விதம் சகிக்க முடியும்?''

இள வயசில், அதிலும் விவாஹம் ஆன புதிசில், நடந்த சம்பவம் அது. நாள் ஆக ஆக இருவருக்குள்ளும் அன்பு முதிர்ந்தது, பாசம் மிகுந்தது, நேசம் வளர்ந்தது. மன ஒற்றுமையும் இறுகியது. ஒருவருக்கொருவர் ஊன்று கோல்போல் விளங்கிவந்தனர்.

தென்னாப்பிரிக்காவிலே ஏழை மக்களின் நிமித்தம் காந்தி மகான் போராட்டம் நடத்தினார்; ஆசிரமம் ஒன்று ஏற்படுத்தி நடத்தினார். அப்போது எத்தனையோ கஷ்ட நஷ்டங்களும் அவமானங்களும் நேர்ந்தன. முடிவில் வெற்றியும் கிட்டியது. கஷ்டம் நேர்ந்த காலத்திலும் சரி, களிப்பு நேர்ந்த காலத்திலும் சரி, கஸ்தூரி அன்னை உடனிருந்து உற்ற பங்கு கொண்டு, உயிர்த் துணைவியாகத் துலங்கினார். ஆனது பற்றி, “எங்கள் இருவருக்கும் இடையேயுள்ள பந்தம்-பாசம் எவராலும் பிரிக்க முடியாததாகும்” என்று மகாத்மா மொழிந்திருக்கிறார்.

தென்னாபிரிக்காவிலிருந்து காந்தி திரும்பியதும், பீகார் மாகாணத்திலே சம்பாரன் ஜில்லாவிலே ஏழைகளுக்குப் பாடுபட முற்பட்டார் மகாத்மா. அங்கே அவுரித் தோட்டங்கள் ஏராளம். அவற்றின் முதலாளிகள் பெரும்பாலும் ஐரோப்பியரே. அன்னாரிடம் விவசாய ஊழியம் புரியும் இந்தியரோ உரைக்க ஒண்ணாக் கஷ்ட நஷ்டம் அடைந்தனர். அதனைப் பரிகரிக்க முயலுகையில், அம்மக்களுக்குப் படிப்பூட்டவும் காந்தி கருதினார்.

அத்தருணம் கிராமங்களிலே அங்கு ஆறு பாடசாலைகள் ஏற்பட்டன. பாடசாலைகளோ வயதுவந்த பெண்மணிகளைக் கருதி எழுந்தவை. அவற்றில் ஒன்றினுக்கு நம் கஸ்தூரி மாதாவையே ஆசிரியையாக நியமித்தார் காந்திமகான். சுகவழி, நல்ல பழக்க வழக்கம், ஒழுங்கு, கட்டுப்பாடு, ஆசாரம் இவற்றைப் போதிப்பதே கஸ்தூரியின் கடமை. கிராம ஏழை மாதரில் சில பலர் அப்பாடசாலைகளுக்கு வரவில்லை.

ஆதலின், கஸ்தூரிபாயே அம்மக்களின் குடிசைகளுக்குச் சென்று, சுகவழி போதிக்க நேர்ந்தது. பெண்மக்களின் ஆடைகள் அழுக்கடைந்து நாற்றம் வீசுவதை அவர் கண்டார். உடனே "அவ்வப்போது புடைவைகளை ஏன் துவைக்கக் கூடாது? துவைத்தால் சுத்தமாக இருக்குமே" என்று அன்னையார் சொன்னார்.

அதற்கு அப்பெண்களில் ஒருத்தி, "தாயே!

நீ சொல்லுவது சரிதான். இடுப்பில் கட்டியுள்ள ஆடைக்கு மாற்றுஆடை வாங்கித் தருமாறு உம் கணவரிடம் சொல்லும். அவ்விதம் வாங்கித் தந்தால், தினம் தவறாமல் நான் குளிப்பேன், சேலையையும் சுத்தமாக வைத்துக்கொள்வேன்" என்றாள்.

இனி, கஸ்தூரிபாயின் மேற்பார்வையிலிருந்த பள்ளிக்கூடமொன்று (கூரையால் ஆன குடிசை) அவுரித் தோட்டக்காரரின் ஏவலால் தீயுண்டு சாம்பலாயது. அதன்மேல் கஸ்தூரிபாயும் அவர் சகாக்களும் சிந்தனை செய்தனர்; சின்னாளைக்கெல்லாம் ஓட்டுவில்லாலான கட்டடம் ஒன்று அங்கே எழுந்தது. ஓட்டுவில் கட்டடத்தைக் கண்டறியாத ஏழைகள் களிப்புக் கொண்டனர்.

கட்டியுள்ள ஆடைக்கு மாற்று ஆடை இல்லையே, என்செய்வேன், என்று ஏழைப் பெண்கள் புலம்பியதென்ன, ஏழைகளுக்காகக் கிளம்பிய பாடசாலை தீயுண்டு சாம்பலானதென்ன - இவையெல்லாம் கஸ்தூரிபாயின் மனத்தில் தைத்தன. முன்னம் தென்னாபிரிக்காவில் நடந்த போராட்டத்திலும் கஸ்தூரி பண்பட்டிருந்தார் அல்லவா? சம்பாரன் சம்பவமும் சேர்ந்துகொள்ளவே, ஏழைமக்களுக்குச் சேவை புரிதலே உடலெடுத்த பயன் என்று கஸ்தூரிபாய்க்கு உறுதி ஓங்கியது. சந்தடியோ படாடோபமோ இல்லாமல், சலியா உழைப்பில் முனைந்து, கணவருக்குப் பக்கபலமானார் கஸ்தூரி அன்னை.

## 4. உப்பும் பருப்பும்

மனைவியர் காமக் கருவிகள் அல்லர்; மற்று வாழ்க்கைக்கு ஓர் துணைவியராம். மனைவியின் பக்கபலமின்றி மகத்தான காரியஞ் செய்தல் எளிதன்று. இல்லாளின் இனிய துணை கொண்டே இணையிலாச் சேவை செய்யலானார் நம் மகாத்மா காந்தி.

இல்லாளுக்கு உடல் ஊனம் நேரின், அதனைக் காத்தல் கணவன் கடமை. அங்ஙனம் காக்குங்கால் அவளது ஒத்துழைப்பு அவசியம். ஒத்துழைப்பு கிட்டாவிடின், பக்குவமாக வழிப்படுத்த வேண்டும். பலவந்தம் பயன் தராது. அத்தகைய நிலையில் உத்தம காந்தி எங்ஙனம் பக்குவமாக்கினார்? அவரே சொல்லட்டும்.

"கஸ்தூரிபாய்க்கு இரத்தப்பாடு கண்டது. உடனே ரண சிகிச்சை நடந்தது. கொஞ்சம் குணமாயிற்று. சின்னாளைக்கெல்லாம், மீண்டும் அந்நோய் மூண்டுகொண்டது. நோயோ தொலைவதாக இல்லை. எவ்வளவோ பரிகாரங்கள் செய்து பார்த்தோம். பயனில்லை. பார்த்தேன் என்ன செய்வதென்று.

"உப்பையும் பருப்பு வகையையும் விட்டு விடு என்று கேட்டுக்கொண்டேன்: மன்றாடிப் பார்த்தேன். பற்பல ஆதாரங்கள் காட்டி வற்புறுத்தினேன். என்ன சொன்னாலும் அவள்

இணங்கவில்லை. முடிவில், என்னை நோக்கி, 'நல்லது! அவற்றை விட்டுவிடு என்று யாரேனும் சொன்னால், நீங்கள் விட்டுவிடுவீர்களா?' என்று வாது பேசினாள்.

"அதுகேட்டு ஒருபக்கம் எனக்கு வருத்தம். ஒரு பக்கம் சந்தோஷம். அவள்மீது எனக்குள்ள அன்பைக் காட்டும் வண்ணம் தருணம் கிட்டியதே என்று சந்தோஷம். அதன்மேல், 'நீ நினைப்பது தப்பு. எனக்கு நோய் கண்டால் உப்பு பருப்பையோ வேறெதையுமோ விட்டுவிடு என்று டாக்டர் சொன்னால், தயங்காமல் அப்படியே செய்வேன், செய்யவும் வேண்டும். இது மட்டுமா? இதோ பார். உப்பையும் பருப்பையும் நீ விட்டாலும் சரி, விடாவிட்டாலும் சரி, டாக்டரின் ஆலோசனை இல்லாமலேயே, இரண்டையும் இப்போது முதலே விட்டுவிட்டேன்' என்று சொன்னேன்.

"உடனே அவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது. 'மிகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். மன்னித்துவிடுங்கள். உங்களை எனக்குத் தெரியும். உங்களுக்கு நான் கோபமூட்டி யிருக்கக் கூடாது. அவற்றை இதோ விட்டுவிடுகிறேன். உறுதி இது. தெய்வத்துக்குச் சம்மதமாக வேண்டும். கொண்ட சபதத்தை விட்டுவிடுக. என்னால் தாங்கமுடியாது' என்று மனத்துயருடன் மறுகினாள்.

"'அவற்றை விட்டுவிட்டால் உனக்கு மிகவும் நல்லது. அவை இல்லாவிடினும் உன் உடல்

நலம் உயர்வாகவே இருக்கும். திண்ணம் இது. என்னைப் பற்றியோ என்ருல், பிரமாதமாகப் பூண்ட சபதத்திலிருந்து நான் நழுவமுடியாது. அதனுல் எனக்கு நலமே பயக்கும். எக்காரண மாயிருந்தாலும் சரி, இந்திரியங்களை அடக்குதல் மனிதனுக்கு நன்மையே பயக்கும். ஆதலின் என்னைக் கட்டாயப்படுத்தாதே, விட்டுவிடு. இது எனக்கு ஒரு சோதனை. தீர்மானம் கொண்டபடி நடக்க உனக்கும் ஓர் ஆதரவாகும்' என்றேன்.

"ஆதலின், என்னை அவள் கட்டாயப்படுத்த வில்லை. 'ஆனுல் நீங்கள் மிக்க பிடிவாத புருஷர். யார் சொன்னுலும் கேட்கமாட்டீர்கள்' என்று சொல்லிக் கண்ணீர்வடித்து ஆறுதலடைந்தாள்.

"இஃது ஒரு சத்தியாக்கிரக சம்பவம் என்றே கொள்வேன். அத்துடன், என் வாழ்க்கையில் நேர்ந்த மிக்க ரஸமான ஞாபகமுமாம்.

"இதன் பிறகு, கஸ்தூரிபாய்க்கு விரைவில் குணமுகம் கண்டது. உப்பையும் பருப்பையும் விட்டதனுலா, உணவில் வேறு வகையான மாற்றம் ஏற்பட்டதனுலா, வாழ்க்கை விதிகளைச் சிறிதும் மீருவண்ணம் நான் கண்டிப்பாகக் கவனித்துவந்ததனுலா, அச்சம்பவம் காரணமாக மனத்திலே ஒரு சந்துஷ்டி தோன்றியதனுலா, எதனுல் குணமுகங் கண்டது என்று என்னுல் சொல்ல முடியாது. என்ருலும் குணமுகங் கண்டது, இரத்தப்பாடும் அடியோடு நின்றது, பாமர வைத்தியன் என்ற பெருமையும் எனக்குப் பெருகியது.

"உப்பையும் பருப்பையும் விட்டதனால், எனக்கு எப்படி? எனக்கு நன்மையாகவே முடிந்தது. விட்ட பொருள்களின்மீது ஆசை உதிக்கவில்லை. ஒரு வருஷம் கழிந்தது. என் இந்திரியங்கள் முன்னையினும் அதிகமாக அடங்கின. அச் சோதனையோ தன்னடக்கத்தை இன்னும் வளர்க்க ஓர் ஊக்கமே அளித்தது. இந்தியாவுக்கு நான் திரும்பிய பின்னும் நெடு நாள் வரையில் அவற்றை விலக்கியே இருந்தேன்.

"1914-ஆம் ஆண்டிலே லண்டனிலே இருந்தபோதுதான் ஒரே ஒரு முறை உப்பையும் பருப்பையும் உட்கொண்டேன். உப்பும் பருப்பும் இல்லாமல் விலக்கும்படி என் சகபாடிகளிலே பலரிடம் தென்னாபிரிக்காவில் பரீக்ஷை பார்த்தேன். வைத்தியருக்குள்ளே அதுபற்றி இரு வகையான கருத்துக்கள் இருக்கலாம். ஆயினும் தன்னல மறுப்பெல்லாம் ஆன்ம பக்குவத்துக்கு உற்றன என்பதில் இம்மியும் ஐயமில்லை."

தம்பதிகளுக்குள் இருந்த ஆசாபாசத்தை அனைவரும் கவனிக்க வேண்டும். கொடு நோயிலிருந்து மனைவி தப்பவேண்டும் என்பதே மகாத்மாவின் ஆசை. பாசமும் தூண்டியது. ஆதலின் பரிகாரமொன்று சொன்னார். கஸ்தூரி மாதாவோ காதுகொடுக்கவில்லை. அத்துடன், உங்களால் இயலுமா என்று குத்திப் பேசினார்.

களங்கமில்லாத பெண்ணரசியே தன் நாதனுடன் அவ்வாறு பேசக்கூடும்.

அதனைக் குத்தலாக அம்மகான் கருதவில்லை. ஆனால் வருந்துவானேன்? உண்மை. "நல்லது நவின்றோம். செவிசாய்க்கவில்லையே. கொடிய நோய் விடாது வளருமே" என்று தான் வருத்தம். "கணவனாகிய நான் கூறினேன். என் வார்த்தையை மீறுகிறாள்" என்ற கோபமே இல்லை.

குத்தல்போன்ற கூற்றைக் கண்டு அவர் களிப்புக் கொண்டதேன்? வாழ்க்கைத் துணைவியின்மீது வைத்துள்ள வாஞ்சை! அவ்வாஞ்சையை வார்த்தையில் காட்டி மட்டும் பயனில்லை. செயலில் காட்டியாகவேண்டும். காட்டினால், மனைவியின் மனத்தைக் கவரலாம். பக்குவம் உண்டுபண்ணலாம். தன் உறுதியையும் உணர்த்தலாம் என்பதேயாம்.

இரண்டும் உலகினுக்கு உண்மையை உணர்த்தி வழி காட்ட வந்த ஆத்துமாக்கள். கொண்ட சபதத்தை நழுவ விடு என்று கஸ்தூரிமாதா கேட்டதன் கருத்து யாது? குற்றத்தை உணர்ந்ததாம் என்பது கிடக்கட்டும். கணவனது மனவுறுதியைப் பரிசோதிக்க எண்ணலாமா?

மனத்தை ஒரு குரங்கென்பர் பெரியோர். மாய மானிடருக்கு மனம் சலிக்கும். அத்தகைய சலனம் நேரின், கொண்ட சபதம் குலையும். குலையின் உடல் நலம் கெடும். ஆன்ம நலனும்

அரிதாகும். ஆதலின் மனைவியின் மனம் சலியா திருத்தல் வேண்டும். கருதிய கருமம் கைகூட வேண்டும். இதற்கு ஒரு காவல்போல் விளங்கு தல் வேண்டும், என்றே கொண்ட சபதத்தில் நழுவ அவர் இணங்கவில்லை. தவிர, மகான் களோ சத்தியத்தின் வளர்ப்பிடம். வாக்கு என் பது கிள்ளுக்கீரையன்று. அஃதே சத்தியத்தின் வடிவு.

## 5. ஊன் மருந்து

மகாத்மா காந்தி பரம சந்நியாசி; மனத்துறவு கொண்ட மகிமையான புருஷர். அவரது முன்னோர்கள் வைணவ மதத்தினர், ஊன் விலக்கும் அஹிம்ஸையுமே மதத்தின் முக்கிய அம்சங்கள். அவரோ சமய சமரஸி. எம்மதமும் சம்மதமே எனும் கொள்கை உடையவர். மதத்தின் உயர்தத்துவமே அவருக்கு உயிர்நிலை.

கஸ்தூரிபாயும் அப்படித்தான். தவிர, மகாத்மாவின் வாழ்க்கைத் துணைவி. கணவனது மனங்கோணமல் நடக்கவேண்டும் என்பது கிடக்கட்டும். மதப்பற்றும் போதமும் அந்த அம்மையின் இலட்சணங்கள். உயிர் போயி னும் சரி, உயர்ந்த மதபோதமே விசேஷம். இதுவே அந்த அன்னையின் கோட்பாடு.

ஊனைத் தின்று ஊனைப் பெருக்காமை முன்னினிதே என்றனர் ஆன்றோர். ஊன் மருந்து தின்று, உயிரைக் காத்தல் வேண்டாம்

என்பதே மாதாவின் பிரதிக்ஞை. உடலி லிருந்து உயிர் ஓடிவிடும், ஊன் மருந்து உட் கொள்ளுதல் வேண்டும் என்றார் மருத்துவ வல்லவர். கஸ்தூரி மாதா அதற்கு மனமொப்ப வில்லை. மகாத்மாவின் வாசகப்படி அதன் விவரம் ஈதாகும்.

"வாழ்க்கையிலே மூன்று முறை பிரமாத மான நோய் கொண்டாள் என் மனைவி. சாக வும் கிடந்தாள். ஆயினும் மயிரிழை தப்பி னாள். வீட்டு மருந்தே கைகொடுத்தது. முதல் தரம் அவள் நோய் கொண்டபொழுது, தென் னாபிரிக்காவிலே சத்தியாக்கிரக ஆரம்ப சமயம். அடிக்கடி அவளுக்கு இரத்தப்பாடு கண்டது.

"ரண சிகிச்சை செய்யவேண்டுமென்றார் டாக்டர். கடைசியில் அவள் ஒப்புக்கொண் டாள். அவள் அப்போது மிக்க பலவீனமாய் இருந்தாள். இரத்தஞ் செத்துவிட்டது. மயக்க மருந்தில்லாமல் சிகிச்சை நடந்தது. அதனால் அவள் மிக்க வாதைப்பட்டாள். எனினும் ஆச்சரியமான மன உறுதி அவளைக் காத்து நின்றது. டாக்டரும் அவர் மனைவியும் அவளுக் குச் சைத்தியோபசார மெல்லாம் செய்துவந்த னர். இது டர்பன் நகரில் நடந்த சம்பவம். நானோ ஜொஹான்ஸ்பர்க் எனும் நகரம் போக வேண்டும் சத்தியாக்கிரக விஷயமாய். கவலை வேண்டாம், போய்வரலாம், ஆபத்தில்லை என் றார் டாக்டர்.

"அவ்வாறே ஜொஹான்ஸ்பர்க் நகரம் சென்றேன். சென்ற சில நாட்களுக்கெல்லாம் ஒரு கடிதம் வந்தது. கஸ்தூரிபாயின் உடல் நிலை மிக மோசம், படுக்கையில் எழுந்து உட்காரவும் சக்தியில்லை, ஒரு சமயம் பிரக்ஞையும் தவறிவிட்டது, இதுவே கடிதத்தின் சாரம்."

"உடல் நிலையை மதித்து மதுவும் மாமிசமும் கொடுக்க வேண்டுமென்று வைத்தியர் விரும்பினார். என் சம்மதமில்லாமல் கொடுக்க அவருக்கு இஷ்டமில்லை. மாட்டிறைச்சி கலந்த தேயிலைப் பானம் கொடுக்கலாமா என்று டெலி போனில் அவர் கேட்டார். நானோ, 'அதற்கு அனுமதி தர முடியாது. பேசச் சக்தி இருக்குமானால் அவளைக் கேளுங்கள். அவள் இஷ்டப் பட்டால் சரிதான்' என்று பதில் தந்தேன்.

"அதற்கு டாக்டர், 'இந்த விஷயத்தில் நோயாளியை நான் கேட்கமாட்டேன். நீங்கள் வந்தாக வேண்டும். எத்தகைய ஆகாரம் தருவது என்பதில் என் இஷ்டம்போல் நடக்கவேண்டும். இல்லையானால் உங்கள் மனைவியின் உயிருக்கு நான் பொறுப்பேற்க மாட்டேன்' என்று சொல்லிவிட்டார்.

"அன்றே நான் டர்பன் நகருக்கு ரயில் ஏறினேன்; டர்பன் வந்து டாக்டரைக் கண்டேன். எனக்கு டெலிபோன் செய்த பொழுதே மாமிசங் கலந்த தேயிலைப் பானம் கொடுத்து விட்டதாக டாக்டர் கூறினார். 'டாக்டர் அவர்களே! இது மோசடி' என்றேன் நான்.

"ஒரு நோயாளிக்கு மருந்தோ ஆகாரமோ கொடுப்பது மோசமன்று. நோயாளிகளைக் காப்பாற்ற முடியுமானால், அவர்களையோ அவர்களின் சுற்றத்தாரையோ ஏமாற்றுதல் நற்குணம் என்றே நாங்கள் கொள்வோம் என்று உறுதியுடன் உரைத்தார் டாக்டர்.

"என் மனம் மிக்க வேதனை கொண்டது. ஆயினும் சாந்தமே பூண்டேன். டாக்டரோ நல்லவர். என் நண்பர். அவரும் அவருடைய மனைவியும் எங்களுக்கு எவ்வளவோ நன்மை செய்துளர். அவர்களிடம் நான் விசுவாசமே காட்டவேண்டும். ஆயினும் மருந்து கொடுக்கும் நியதியைக் கண்டு நான் சகிக்க முடியவில்லை.

"ஆதலால், 'டாக்டரே! இப்போது என்ன செய்யப் போகிறீர்கள், சொல்லுங்கள். என் மனைவிக்கு மாமிசமோ மாட்டிறைச்சியோ கொடுக்க நான் ஒருப்படேன். ஒரு சமயம் அவள் உயிருக்கு ஆபத்து நேர்வதாக இருந்தாலும் சரி, அவள் விரும்பாவிட்டால், மாமிசமோ மாட்டிறைச்சியோ கொடுப்பதற்கு நான் உடன்படேன்' என்று சொன்னேன்.

"அவர், 'உங்கள் இஷ்டம்போல் தத்துவம் கொள்ளுங்கள். ஆனால் நோயாளியை என்னிடம் ஒப்படைத்திருக்கும் வரையில், என் விருப்பம் போல் மருந்தூட்ட எனக்கு உரிமை வேண்டும். இதற்கு நீங்கள் ஒப்பவில்லையானால், அவளை நீங்கள் அழைத்துக்கொண்டு போய்விடலாம்.

என் வீட்டில் அவள் சாக, நான் பார்க்க மாட்டேன்' என்று சொல்லிவிட்டார்.

"உடனே, 'அவளை அழைத்துக்கொண்டு போகவேண்டுமா என்ன?' என்றேன்.

"'நான் எப்பொழுது சொல்லுகிறேனோ அப்பொழுது அழைத்துக்கொண்டு போக வேண்டியதுதான். என் இஷ்டம்போல் மருந் தூட்டவோ ஆகாரம் கொடுக்கவோ வேண்டும். அப்படியானால், நானும் என் மனைவியும் எங்களாலான உதவியெல்லாம் செய்வோம் உம் மனைவிக்கு. நீங்களும் அவளைப்பற்றிக் கவலையே இல்லாமல், உங்கள் காரியத்தைப் பார்க்கலாம். சாமானியமான இந்த விஷயத்தை நீங்கள் உணராவிட்டால், உங்கள் மனைவியை அழைத்துக்கொண்டு போகலாம் என்று நான் சொல்ல நேரும்' என்றார் அவர்.

"அத்தருணம் என் மைந்தர்களில் ஒருவன் என்னுடன் இருந்ததாக ஞாபகம். என் கருத்தே முற்றும் சரி என்றான் அவன். மாமிசம் கலந்த தேயிலைப் பானம் தன் தாய்க்குத் தரக் கூடாது என்றும் சொன்னான். உடனே நான் கஸ்தூரிபாயுடன் பேசினேன். அவளோ மிக்க பலவீனமாயிருந்தாள். அச்சமயம் இவ்விஷயத்தைப்பற்றி அவளைக் கேட்கலாகாதென்று கருதினேன்.

"ஆயினும் என்ன? விதியில்லை அவளைக் கேட்டறிய வேண்டுமென்றே நினைத்தேன். டாக்டருக்கும் எனக்கும் நடந்த பேச்சு வார்த்தையை அவளிடம் சொன்னேன்.

"நான் மாமிசம் கலந்த தேநீர் பருகமாட்டேன். மனிதராய்ப் பிறத்தல் அரிதுதான். ஆனாலும் அத்தகைய பாவம் என் உடலில் படிவதினும், உங்கள் மடியில் நான் மரித்தலே மேல் என்றாள்.

"இப்படி அவள் சொன்னதும், அவளுடன் வாதாடினேன். என் வழியைப் பின்பற்றி நடக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை என்று கூறினேன். மருந்தாக மதுவையோ மாமிசத்தையோ கொள்ளுதல் கூடும் என்று என்னுடைய ஹிந்து நண்பர்களும் பிறரும் நம்புவதாக உரைத்தேன். அவளோ பிடிவாதமாகவே இருந்தாள். உடனே என்னை அழைத்துக்கொண்டு போய்விடுங்கள், உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன் என்றாள்.

"எனக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. அவளை அழைத்துக்கொண்டு போய்விடவே துணிந்தேன். ஆயினும் கொஞ்சம் கலக்கந்தான் எனக்கு. அவளுடைய முடிவை டாக்டரிடம் சொன்னேன்.

"அவர் கோபாவேசத்துடன், கொஞ்சமும் பொறுப்பில்லாத பேர்வழி நீர். உம் மனைவியின் நிலையை மதிக்கையில், அவளிடம் இந்த விஷயத்தைப்பற்றிப் பேச உமக்கு வெட்கமில்லையா என்ன? அழைத்துக்கொண்டு போகக் கூடிய நிலைமையில் இல்லை உம் மனைவி. சிறிதுகூடச் சந்தடியே கூடாது. அழைத்துக்கொண்டு போனால், வழியிலே அவள் இறந்து போகக்

கூடும். அவளை அழைத்துக் கொண்டுதான் போவேன் என்று பிடிவாதம் பண்ணினால், உமது இஷ்டம்போல் செய்யும். அவளுக்கு மாமிசம் கலந்த தேநீர் கொடுக்க உமக்கு விருப்பமில்லையானால், ஒரு நாள்கூட அவளை என்னால் இங்கு வைத்திருக்க முடியாது. அபவாதத்துக்கு நான் ஆளாக மாட்டேன் என்று கோதித்துக் கூறினார்.

"எனவே அவளை உடனே டாக்டரின் வீட்டிலிருந்து அப்புறப்படுத்த முடிவு செய்தோம். அப்போதோ வானம் தூறிக்கொண்டே இருந்தது. ரயிலடியோ கொஞ்சம் தொலைவில் இருந்தது. டர்பன் நகரிலிருந்து நாங்கள் ரயிலேறி, போனிக்ஸ் என்னுமிடம் சேரவேண்டும். அந்த இடத்துக்கும் எங்கள் விடுதிக்கும் ரஸ்தா மார்க்கமாக இரண்டரை மைல் தூரம்.

"எனவே அவளை அழைத்துச் செல்லுவதில் ஆபத்து உண்டு. ஆயினும் ஆண்டவன்மீது பாரத்தைப் போட்டேன். கருதிய காரியத்திலும் இறங்கினேன். போனிக்ஸ் எனும் நகர ரயிலடியிலே ஊஞ்சல் படுக்கையும் சூடான பாலும் வெந்நீரும், கஸ்தூரியைச் சுமந்து செல்ல ஆறு மனிதரும் கொண்டு எங்களைச் சந்திக்கும்படி வெஸ்டு என்பவருக்கு முன்னதாகவே ஓர் ஆளை அனுப்பினேன்.

"டாக்டரின் வீட்டிலிருந்து ரயிலடிக்கு இட்டுச் செல்ல ஒரு ரிக்ஷா அமர்த்தினேன். அபாயகரமான நிலையில் அவளை அவ்வண்டியில்

ஏற்றினேன். டாக்டரின் வீட்டிலிருந்து புறப்பட்டுவிட்டேன்.

"கவலைப்படாதே என்று கஸ்தூரிபாய்க்கு ஆறுதல் கூற அவசியம் நேரவில்லை. ஏனெனில் அவளே என்னை நோக்கி, நீங்கள் கவலைப்படாதீர்கள்; எனக்கு ஒன்றும் நேராது என்று எனக்குத் தேறுதல் சொன்னாள்.

"அப்போது அவள் எலும்பும் தோலுமாகவே இருந்தாள். பலநாளாக நல்ல ஆகாரமே இல்லை அல்லவா? டர்பன் நகர ரயிலடியோ மிகப் பெரியது, எனினும் உள்ளே ரிக்ஷாவை இழுத்துச் செல்ல முடியவில்லை. ரயில் வண்டியின் அருகே போவதற்குக் கொஞ்சதூரம் நடந்தாக வேண்டும். ஆதலின் நான் அவளை என் கைகளில் தாங்கிச்சென்று, ரயில் வண்டிக்குள் உட்கார வைத்தேன். போனிக்ஸ் நகரிலிருந்து ஊஞ்சல் மெத்தையில் அவளைத் தூக்கிச் சென்றோம். அங்கே எங்கள் விடுதி சேர்ந்ததும், சிறிது சிறிதாக அவளுக்குப் பலம் வந்தது.

"போனிக்ஸ் விடுதிக்கு நாங்கள் சென்ற இரண்டு மூன்று தினங்களுக்கெல்லாம் சாமியாரொருவர் அங்கு வந்துசேர்ந்தார். டாக்டரின் வார்த்தையைத் தட்டிக்கொண்டு நாங்கள் புறப்பட்டு வந்தது கேட்டு அவர் சகிக்கவில்லை. ஆதலின், அபிமானம் மேலிட்டு எங்களுடன் மன்றாட வந்தார். வந்தபோது என் இரண்டாவது புத்திரன் மணிலாலும் மூன்றாவது மைந்தன் ராமதாஸும் இருந்தனர் என்று ஞாபகம்.

"மநு ஸ்மிருதியிலிருந்து ஆதாரங்காட்டி, ஆபத்துக் காலத்தில் மாமிசம் அருந்துதல் மதக் கேடாகாது என்று அவர் வாதித்தார். என் மனைவியின் முன்னிலையில் அவ்விதம் வாதம் நடப்பதில் எனக்கு விருப்பமில்லை. என்றாலும் மரியாதைக்காக மௌனமாக இருந்தேன். மநு ஸ்மிருதியிலே அவர் எடுத்துக்காட்டிய மேற் கோள்கள் எனக்குத் தெரியும். அவை எனக்கு நம்பிக்கையூட்ட அவசியமில்லை. அந்த மேற் கோள் சுலோகங்கள் இடைச்செருகல்கள் என்று சிலர் அபிப்பிராயப்படுவதை நான் அறிவேன். இடைச்செருகல் அல்ல என்று வைத்துக்கொண் டாலும், சைவ உணவில் எனக்குள்ள கருத்து அபாரம். கஸ்தூரியின் நம்பிக்கையும் சரி. அசைக்க முடியாததாம்.

"சாஸ்திர வாக்கியங்கள் அவளுக்குத் தெரியவே தெரியா. ஆயினும் வம்ச பரம்பரை யாக வந்துள்ள மத சம்பிரதாயத்தை அவள் நன்கறிவாள். என் குழந்தைகளோ அப்பா செய்ததே சரி என்று சாதித்தனர். சுவாமியா ரின் வாதத்தையும் இலேசாக மதித்தனர்.

"கஸ்தூரிபாய் பார்த்தாள்; சுவாமிகளே! நீங்கள் என்ன சொன்னாலும் சரி, மாமிசங் கலந்த தேநீர் பருகி உயிர்வாழ எனக்கு விருப் பமில்லை. போதும் போதும் உங்கள் வாதம். எனக்கு வேண்டாம், என் கணவருடனும் குழந்தைகளுடனும் வேண்டுமானால் வாதஞ் செய்து பாருங்கள்; மன உறுதிகொண்டு விட்

டேன். பிறழ முடியாது என்று கூறி முற்றுப் புள்ளி வைத்தாள்."

## 6. "எங்கே போவேன்?"

சீதாபதியை அவதாரபுருஷர் என்போம்; தெய்வமாகவும் கொண்டாடுவோம். ஆயினும் அவரது வாழ்க்கையில் மனிதத் தன்மை அல்லது மானிட இயல்பு காணக்கூடும். திருவள்ளுவரின் தேவி வாசுகியினும் சிறந்த வனிதையர் உண்டோ? சித்தன் ஒருவன் தோன்றி இரும்பைப் பொன்னாக்கிக் கொடுத்தான். அது கண்டு வாசுகி பிரமித்தாள்; பர்த்தா வந்ததும் பாசங் கலந்த பூரிப்புடன் பேசினாள்.

மானிட இயல்பு மகான்களிடமும் ஒரோர் சமயம் தலைகாட்டும். பரம்பரை வாசனையும், பிறப்பின் பெருமை சிறுமையும் அப்படித்தான். தாயுமானாரும் மனமடங்கக் கற்றிலனே என்று புலம்பியுள்ளார். மோகனதாஸ் மூர்த்தியோ இல்லறத்துறவி. பையப் பையப் பக்குவம் பெற்றவர்; ஆகார விவகாரங்களை ஒடுக்கி மனத்தையும் அடக்கி மாண்பு கொண்டவர். அவருக்கு வாய்த்த தேவியும் வரவரப் பக்குவநிலை எய்திய விதம் பலருக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

பக்குவம் வாய்த்ததற்கு முன்னுள்ள சம்பவமொன்று - சதிபதிகளுக்கு இடையே நிகழ்ந்த சலிப்பொன்று - பிறருக்கெல்லாம் பெரிய படிப்பினை யாகும். விவரம் யாதெனில் காந்தியடிகளின் வார்த்தையில் விளம்புவோம்.

"டர்பன் நகரில் நான் வக்கீல் தொழில் செய்த காலையில், என் குமாஸ்தாக்கள் அடிக்கடி என் வீட்டில் தங்கிவிடுவர். அவர்களில் ஹிந்துக்களும் உண்டு, கிறிஸ்தவரும் உண்டு. அவர்களை என் உறவின் முறையாராகவே கருதுவேன். என் குடும்பத்தாரைப் போலவே அவர்களை நடத்திவந்தேன். அவ்விதம் அவர்களை நடத்துவதில், என் மனைவி குறுக்கிட்டால், அவளுக்கும் எனக்கும் இடையே கசப்பு நேரும். குமாஸ்தாக்களில் ஒருவர் கிறிஸ்தவர்; பஞ்சமப் பெற்றோருக்குப் பிறந்தவர்.

"நான் இருந்த வீடு மேனாட்டு முறையில் கட்டப்பட்டது. கழிநீரையும் சிறுநீரையும் அறையிலிருந்து வெளியே கொண்டு செல்லச் சாலகம் கிடையாது. ஆதலின் ஒவ்வோர் அறையிலும் சிறுநீர் கழிக்கப் பாண்டம் ஒன்றுண்டு. வேலைக்காரனைக் கொண்டு அப்பாண்டங்களை நாங்கள் கழுவச் செய்வதில்லை. நானோ என் மனைவியோதான் கழுவுவது வழக்கம்.

"தங்கள் வீடேபோல் விருப்பி வசித்த குமாஸ்தாக்கள் தங்கள் தங்கள் அறையிலுள்ள பாண்டங்களைத் தாங்களே கழுவிவிடுவர். கிறிஸ்தவ குமாஸ்தாவோ எங்கள் வீட்டுக்குப் புதியவர். ஆதலின் அவர் அறையிலுள்ள சட்டியைக் கழுவுதல் எங்கள் கடமையாயிற்று. மற்றையோரின் சட்டிகளை என் மனையாள் துலக்கிவிடுவாள். பஞ்சமனாய் இருந்தவனது பாண்டத்தை விளக்க அவள் விரும்பவில்லை.

எங்கள் இருவருக்கும் பிணக்கு உண்டாகி விட்டது.

"அச்சட்டியை நான் கழுவுவதிலும் அவளுக்குச் சம்மதமில்லை. தானும் கழுவ விரும்பவில்லை. கோபத்தால் கண்சிவக்க, கன்னத்தின் வழியே முத்துப்போன்ற கண்ணீர் வடியக் கையில் சட்டியுடன் மாடிப் படிக்கட்டிலிருந்து கீழே இறங்கிய வண்ணம் அவள் என்னைக் கடிந்தது இன்றும் என் ஞாபகத்தில் உளது. அப்போது நானோ கொடுமை தழுவிய அன்பார்ந்த புருஷனாக விளங்கினேன். அவளுடைய ஆசிரியனாக என்னை மதித்தேன். கண்மூடித்தனமான அன்புகொண்டு அவளைக் கடிந்தேன்.

"சட்டியைத் தூக்கிக்கொண்டு அவள் போவதில் மட்டும் எனக்குத் திருப்தியில்லை. சந்தோஷமாகச் செய்யவேண்டும் என்பதே என் ஆசை. ஆதலின், என் வீட்டிலே இப்படியெல்லாம் நடக்கக் கூடாது என்று உரக்கக் கத்தினேன்.

"அச் சொல்லோ அம்புபோல் அவள் மனத்தை ஊடுருவியது.

"குரலெடுத்து அவள் கூறியது இது:— உங்கள் வீடா? நீங்களே இருங்கள், நான் போகிறேன் என்றாள்.

"உடனே நான் என்னை மறந்தேன்; கருணை என்பது என்னிடம் வறண்டுவிட்டது. அவள் கையைப் பிடித்துத் திக்கற்ற அவளை

வாசற்படியண்டை இழுத்து வந்து, கதவைத் திறந்து வெளியே தள்ளக் கருதினேன். மாலை மாலையாக அவள் கண்களிலிருந்து நீர் பெருகி யோடியது.

"உங்களுக்கு வெட்கம் இல்லையா? இப்படியும் உங்களை மறந்து காரியம் செய்வீர்களா? நான் எங்கே போவேன்? இங்கே என்னை வைத்து ஆதரிக்கப் பெற்றோரும் இல்லை, உற்றாரும் இல்லையே. உங்களுடைய பெண்டாட்டியாதலின், உங்களுடைய குத்தும் அடியும் நான் பொறுத்துக்கொள்ள வேண்டும் போலும்! வேண்டாம், வேண்டாம், தெய்வத்துக்கெல்லாம் பிரியமாக இருக்கும், நேர்மையாக நடவுங்கள், கதவை மூடுங்கள். இக்காட்சியைக் கண்டால் எல்லோரும் சிரிப்பார்கள் என்று கதறினாள்.

"உடனே தீர புருஷனைப் போல் தோற்றங் கொண்டேன். எனினும், உள்ளூற வெட்கம் வந்து என்னைப் பிடுங்கித் தின்றது. கதவை மூடினேன். என் மனைவியும் என்னை விட்டுப் பிரிய முடியாது. நானும் அவளை விட்டுப் பிரிய முடியாது. எங்களுக்கு இடையே எத்தனையோ பிணக்குகள் நேர்ந்ததுண்டு. முடிவிலே இருவருக்கும் இடையே சாந்த சமாதானந்தான். இணையிலாப் பொறுமை வாய்ந்த மனையாளுக்கே முடிவில் வெற்றிமாலை.

"இன்றோ அச்சம்பவத்தை விருப்பு வெறுப்பு ஏதுமின்றி வரைகின்றேன். அச்

சர்பவ காலம் மலையேறிவிட்டது. முன்போல் கண்மூடியான காம விகாரமுள்ள கணவனல்ல நான். முன்போல் அவள் ஆசிரியனும் அல்லன் நான். அவளிடம் நான் அன்று கசப்புக் காட்டியதுபோல், இன்று விரும்பினால் அவளும் என்னிடம் கசப்புக் காட்டலாம். நாங்கள் இருவரும் பழகித் தேர்ந்த தோழராயுள்ளோம். காம விகாரங் காரணமாக ஒருவரையொருவர் நேசிப்பதென்பது அந்தக் காலம். யாதொரு பிரதிபலனையும் எதிர்பாராமல், நான் நோய்வாய்ப்பட்ட காலத்திலெல்லாம் எனக்கு உண்மைத் தாதியாக இருந்திருக்கிறாள் அவள்.

"அச்சர்பவம் 1898-ஆம் ஆண்டு நடந்ததாகும். அப்போது பிரம்மசரியம் என்பது பற்றி எனக்கு நினைப்பே இல்லை. மனையாள் என்பவள் வாழ்க்கைத் துணைவி, தோழி, கணவனின் சுக துக்கங்களில் பங்குள்ளவள் என்பதே நியதி. அந்த நியதி ஏதுமின்றி, மனையாள் என்பவள் கணவனுக்குரிய காமக் கருவி, கணவன் இட்டபடி நடக்க வேண்டியவள், அதற்கே பிறந்தவள் என்பதே அன்றிருந்த கொள்கை.

"1900-ஆம் ஆண்டில்தான் அக்கொள்கை மாறியது. என்னிடம் காமக் கருத்து கொஞ்சம் கொஞ்சமாக அகன்று வர, என் குடும்ப வாழ்க்கை வரவர இனிமையும் சுவையும் சாந்தமும் சந்தோஷமும் கொள்ளத் தலைப்பட்டது.

"அவளிடம் ஓர் உத்தம குணம் உண்டு. எனக்குள்ள லக்ஷ்யத்தை விடுத்துத் தனக்கென்று அவளுக்கு ஒரு லக்ஷ்யம் இல்லை. என்னைப் பின்பற்றி நடப்பதே பாக்கியமென அவள் கருதியுள்ளாள். அடக்கத்துடன் வாழ நான் முயலுவதில் அவள் குறுக்கிட்டதில்லை. திருப்தி, சந்தோஷம், முன்னேற்றம் இவற்றிற்கு உறைவிடம் எங்கள் வாழ்க்கை. இதற்கு அவள் உற்ற துணை, உயர்ந்த துணை, ஒப்பில்லாத் துணை!"

## 7. நகைப் பூசல்

கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம். பெண்ணுக்கு அணிகலம் பதிபக்தி. பதிபக்திக்கும் நம் கஸ்தூரி அன்னை ஓர் அத்தாட்சி. கணவனே கண்கண்ட தெய்வம். அஃதே கஸ்தூரிபாயின் கருத்து; உயர் ஒழுக்கமுமாம்.

ஆனைக்கும் அடி சறுக்கும் என்பர். மாதேவரும் முக்குண வயத்தராதல் உண்டு. ஓரோர் சமயம் தமோகுணம் அன்னவரையும் பிடித்தாட்டும். எனின், மானிடர் எம்மாத்திரம்?

நகை காரணமாக ஒரு பூசல். காந்தி மகானுக்கும் கஸ்தூரி அன்னைக்கும் இடையே நிகழ்ந்தது. மகாத்மாவின் வார்த்தையில், அதனை மொழிவோம். "சத்திய சோதனை"யில் அப்பெருமான் புகல்வது இது:—

"தென் ஆபிரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு நான் திரும்பும் சமயம். நேட்டால் இந்தியர்

என்மீது அன்பமுதமாரி பொழிந்தனர்; விலை யேறப்பெற்ற கொடைப் பொருளும் வருஷித்த னர். எல்லாம் தங்கம், வெள்ளி, ரத்தினங்கள்.

"கொடைப் பொருளில் ஒன்று தங்கச் சங்கிலி. அஃது என் மனைவிக்கு. ஆயினும் என் சேவைக்காகவே ஈந்தனர். கொடைப் பொருள் களை யெல்லாம் பார்த்தேன். இரவு முழுதும் தூக்கம் பிடிக்கவில்லை. மனத்திலோ கிளர்ச்சி. எல்லாவற்றையும் என்ன செய்வது என்பதே யோசனை. ஒன்றும் புலப்படவில்லை. விலை மிகுந்த பொருள்கள். விட்டுவிடுதல் கஷ்டம். வைத்துக்கொள்வதோ இன்னும் கஷ்டம்.

"நான் வைத்துக்கொள்வதாக இருந்தாலும், என் குழந்தைகள் என்ன சொல்லுவர்? என் மனைவி யாது சொல்லுவாள்? சேவை செய்தலே வாழ்வின் நோக்கம். சேவையிலுள்ள ஆனந்தமே வெகுமதி என்று அவர்களுக்குத் தெரியும்.

"என் வீட்டிலே விலை மிகுந்த நகைகள் இல்லை. எளிய வாழ்க்கையே பூண்டிருந்தோம். எனவே, தங்கக் கைக்கடிகாரம் ஏது? தங்கச் சங்கிலி ஏது? வைர மோதிரந்தான் ஏது? ஆனாலும் நகை மோகம் வேண்டாமென்று வற்புறுத்தி வந்தேன். இந்நிலையில் எனக்குக் கிட்டிய நகைகளை நான் என்ன செய்வது?

"கொடைப் பொருள்களை வைத்துக் கொள்வதில்லை என்று முடிவு கட்டினேன். அவற்றை நேட்டால் இந்தியரின் தர்ம சொத்

தாக்கி ஒரு பத்திரம் வரைந்தேன். ருஸ்தம்ஜியையும் வேறு சிலரையும் தர்மகர்த்தாக்களாக நியமித்தேன். மறுதினம் காலையில் மனைவி மக்களுடன் கலந்து பேசினேன். பெருத்த சுமையை நீக்கிக்கொண்டேன்.”

“என் மனைவியைச் சரிப்படுத்துவதில் கொஞ்சம் கஷ்டம் இருக்குமென்று தெரியும். குழந்தைகள் கஷ்டங் கொடுக்கா என்பது நிச்சயம். ஆதலின் அக்குழந்தைகளை என் வக்கீலாக நியமித்துக்கொள்ளத் துணிந்தேன்.

“என் யோசனைக்குக் குழந்தைகள் உடனே இணங்கின. இந்த விலைமிகுந்த பொருள்கள் வேண்டாம், அவற்றை இந்திய சமூகத்துக்கே திரும்பக் கொடுத்துவிட வேண்டும், எங்களுக்கு எப்போதாவது நகை வேண்டியிருந்தால் விலைக்கு வாங்கிக் கொள்ளுகிறோம், என்று குழந்தைகள் கூறின.

“எனக்கு ஆனந்தம் பிறந்தது. ‘அப்படியானால், அம்மாளுடன் நீங்கள் சொல்லி அவளைச் சரிப்படுத்த வேண்டும். செய்வீர்களா?’ என்று கேட்டேன்.

“கட்டாயம் அது எங்கள் வேலை. அம்மாளுக்கு நகை எதற்கு? எங்களுக்கு வேண்டியிருக்கும் என்று சொல்லுவாள். எங்களுக்கோ வேண்டியதில்லை. எனவே, தாயார் இணங்காமலிருக்க இடமில்லை என்றனர்.

“சொல்லுதல் எளிதுதான். அப்படியே செயல் இருக்குமா?

"என் மனைவி சொல்லுவாள் :—உங்களுக்கு நகைகள் வேண்டாம். உங்கள் குழந்தைகளும் வேண்டாம் என்னலாம். தட்டிக் கொடுத்தால் நீங்கள் சொன்னபடி கூத்தாடும். நான் போட்டுக்கொள்ள வேண்டாம் என்று நீங்கள் சொல்வது சரிதான். நாளைக்கு நாட்டுப் பெண்கள் வருமே. அவர்களுக்கு வேண்டாமா? நாளைக்கு எப்படி இருக்குமோ? யாருக்குத் தெரியும்? அன்போடு அவர்கள் கொடுத்தார்கள். இந்தத் தங்கச் சங்கிலியை நான் விடமாட்டேன்.

"இப்படி யெல்லாம் அவள் வாதாடிக் கொண்டே போனாள். முடிவில் கண்ணீரும் வடித்தாள். ஆனால் குழந்தைகளோ ஓரே பிடியாய் இருந்தன. நானும் கஸ்தூரிபாயின் கண்ணீர் கண்டு கலங்கவில்லை.

"நான் சாந்தமாகச் சொன்னேன் :—குழந்தைகளுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை. சின்ன வயதில் மண முடிக்கவும் நமக்கு இஷ்டமில்லை. தக்க வயது வந்தால், வேண்டியதை யெல்லாம் அவர்கள் தேடிக் கொள்வார்கள். நகை வேண்டு மென்கிற நாட்டுப் பெண்கள் நமக்கு வேண்டாம். அவர்களுக்கு நகை போட வேண்டுமானால், நான் இருக்கிறேன். அப்போது என்னைக் கேள்.

"உங்களையா கேட்க? உங்களை எனக்குத் தெரியுமே. என் நகைகளை எல்லாம் வாங்கிக் கொண்டு விட்டீர்கள். நகைகள் என்னிடம்

இருக்கிற வரையில், என்னைச் சும்மா விட்டீர்களா? நாட்டுப் பெண்களுக்கு நீங்கள் நகை போடப் போகிறீர்களா? பேஷ்! போடுகிற மனுஷாளைப் பாரு! என் பிள்ளைகளெல்லாம் இப்பொழுது முதலே சந்நியாசி ஆக வேண்டும் என்கிறீர்களே? மாட்டேன். தங்கச் சங்கிலியைத் தரமாட்டேன். என் நகையைக் கேட்க உங்களுக்கு என்ன உரிமை! பேஷ், பேஷ்! என்றாள்.

"அப்படியா?

"தங்கச் சங்கிலி உன் சேவைக்காக வந்ததா? என் சேவைக்காக வந்ததா? என்றேன்.

"சரி, நீங்கள் சேவை செய்தால், நான் சேவை செய்த மாதிரிதான். இரவு பகலாக உங்கள் நிமித்தம் என்ன பாடுபட்டிருக்கிறேன். இது சேவை அல்லவா? இப்படி இருக்கவேண்டும், அப்படி இருக்கவேண்டும் என்றெல்லாம் பலவந்தப்படுத்தினீர்கள். என்னை அழ வைத்தீர்கள். எவ்வளவோ கண்ணீர் வடித்திருக்கிறேன். உங்களுக்கு அடிமையாகவே இருந்தேனே.

"அவ்விதமெல்லாம் மிகவும் குத்திப் பேசினாள். சொல் சூடு என் மனத்தில் சுருக்கென்று தைத்தது. ஆனால் என் பிடிப்பை விடவில்லை. கொடைப் பொருள்களையெல்லாம் திருப்பிக் கொடுக்கவே முடிவு கட்டிவிட்டேனல்லவா? முடிவில் அவளை ஒப்பவைத்தேன். 1896-ஆம் ஆண்டு, 1901-ஆம்

ஆண்டு இந்த இரண்டு வருஷங்களிலும் வந்த கொடைப் பொருள்களை யெல்லாம் திருப்பிக் கொடுத்தேன். அப்பொருள்களின் பரிபாலனத்தைக் கருதி ஒரு பத்திரம் எழுதினேன்; அவற்றை ஒரு "பாங்கியி"ல் ஒப்படைத்தேன். தென் ஆபிரிக்கா இந்திய சமூகத்தின் நலத்தைக் கருதி, என் விருப்பத்தையோ தர்மகர்த்தாக்களின் விருப்பத்தையோ மதித்துச் செலவிட ஏற்பாடு பண்ணினேன்.

"அந்த மூலதனம் இன்னும் அங்குளது. கருதியபடி காரியமும் நடந்து வருகிறது. கைக்கு வந்த பொருளைக் கொடுத்துவிட்டேனே என்று நான் இப்பால் வருந்தியதில்லை. தர்ம சொத்தாக வைத்தது சரியென்று என் மனைவியும் நாளடைவில் உணர்ந்துகொண்டாள்."

## 8. தவங் கிடத்தல்

கானகஞ் சென்று, கந்த மூலாதிகள் தின்று கண்ணிறுக மூடி, கருத்தைக் கடவுள்பால் இருத்தி நிற்றலே தவம் என்பவர் சிலர். வைதிக வேடம் பலவும் தாங்கிச் சிவசிவா என்று சதா ஜபித்து, எப்போதும் ஈசனைக் கருதி நிற்றலும் தவம் என்பர் வேறுசிலர். நம் அன்னை கஸ்தூரி பாய் எங்ஙனம் தவஞ்செய்தார் என்று சிறிது பார்ப்போம்.

நாவை அடக்கி, இந்திரியங்களையும் ஒடுக்கி, நல்ல சிந்தனையே செய்துவரின் மனம் விரியும், ஆன்ம பக்குவம் உண்டாகும், பரமாத்மாவின்

அம்சமான ஜீவாத்மா பரமாத்மாவை அறிய முயலும், நாளடைவில் அறிந்து ஆனந்திக்கும். முடிவில் அத் தெய்வத் தன்மை கொள்ளும்.

மகாத்மா காந்தி முன்னம் தென்னாபிரிக்கா சென்றார்; அங்குள்ள மக்கள்நிலை கண்டார்; ஆளை ஆள் அடித்துச் சாப்பிடுவது பார்த்தார்; எளியோரை வலியார் வாட்டுவதா என வருந்தினார், முடிவிலே மானிட கோடிகளை உய்விக்க வேண்டும் என்று கங்கணம் பூண்டார். பிறர் சொல்லி அது ஏற்படவில்லை. தானே அவர் மனத்தில் உதித்தது. உடனே தமது தகுதியை அவர் எண்ணிப் பார்த்தார். கொண்ட கருத்தினுக்கு ஏற்ப ஐந்தையும் அடக்கக் கருதினார்; உடனே பிரம்மசரிய விரதங் கொள்ளலானார்.

கொள்ளுமுன், தேவி கஸ்தூரிபாயை அவர் கலந்தாலோசிக்கவில்லை. பிரம்மசரிய விரதங் கொள்ள அத்தேவியின் ஆதரவு வேண்டும் அன்றோ? எனினும் விரதம் கொண்டபின்பே, தேவிக்கு உணர்த்தினார்; தேவியும் நல்லது என்றார் உடனே. 1906-ஆம் ஆண்டு அவர் அவ்விரதம் பூண்டார்.

அன்றுமுதல் இருவரும் துறவுத்தன்மை கொண்டனர். கணவன் மனைவியர் என்பது பெயரளவில்தான்; அல்லது முன்னமிருந்த தொடர்பைக் கொண்டுதான். நாட்டினிடையே இருந்து, நரர்களுடன் சேர்ந்து வாழ்ந்து, ஐம் புலன்களையும் அடக்கித் துறவு கொள்ளுதல் அருமையினும் அருமையன்றோ? பிரம்மசரியம்

பூண்டுவிட்டேன் என்றதும், நல்லது என்று உரைத்த நாயகியும் தவத்தன்மை கொண்டு விட்டார்.

தென்னுபிரிக்காவிலே நம்மவருக்காக அவர் பாடுபட முயன்றதும், சத்தியாக்கிரகத்தில் இறங்கினுர்; சத்தியாக்கிரகம் எனில் சத்தியத்தை ஆதாரமாகக் கொள்ளாத சட்டத்தை மீற வேண்டும்; மீறவே சிறைவாசஞ் செய்ய வேண்டும். பிறரை அதற்கு அழைத்த காந்தி மகான் கஸ்தூரி பாயைக் கேட்கவே இல்லை.

அஃதறிந்த அன்னை சொன்னது இது:—
"சத்தியாக்கிரகம் பற்றி எனக்கு ஏதும் சொல்லவில்லை; இதனுல் பெரிதும் வருந்துகிறேன். சிறைக்குச் செல்ல என்னிடம் தகுதியில்லையா என்ன? மற்றவரை அழைக்கையில், என்னையும் அதில் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும்."

அதற்கு, "உனக்கு மனம் இருக்குமோ இராதோ? மேலும் சிறைவாசம் மகா கடினமான விஷயம். தாங்கமுடியாமல், இடைநடுவில் நீ தளர்வையேல், எனக்கு அபகீர்த்தி உண்டாகும். ஆதலின்—" என்ருர் காந்தி.

"அப்படியா? நான் சிறைவாசங் கொண்டு மனந்தளர்ந்து உங்களுக்கு என்னுல் மாசுநேரின, என்னை உங்கள் மனைவியென நீங்கள் கருத வேண்டாம். நீங்களும் உங்கள் பிள்ளைகளும் சிறைவாசத்தைத் தாங்கமுடியுமானுல் என்னுல் முடியாதா என்ன? நானும் இந்த இயக்கத்தில் சேர்வேன்" என்ருர் அன்னையார்.

ஆறு வருஷ காலம் தென்னுபிரிக்காவிலே போராட்டம் நடந்தது. காந்தியுடன் சேர்ந்து, பன்முறை சிறை புகுந்தார், இன்னல் எய்தினார், எந்தக் கஷ்டமும் அனுபவித்தார் கஸ்தூரி அன்னை. காந்திக்கு ஏற்ற மனைவி, வீரமாது, பிரிய வாழ்க்கைத் துணை என்று அன்றே உலகம் அறிந்தது.

அங்கே போராட்டம் நடந்துகொண்டிருக்கையில், பட்டாணிய ரொருவன் பதற்றங்கொண்டு, காந்தியின் தன்மையுணராமல், பிரமாதமாகத் தாக்கினான் அவரை. அப்போது அவரது உயிருக்கே உலைநேரும்போ லிருந்தது. அவ்வேளை உடனிருந்து, அக் கோரத்தைக் கண்டார் கஸ்தூரி பாய். எல்லாம் காலத்தின் கோலமென்றே கொண்டார். பட்டாணியன்மீது ஆத்திரம் சிறிதும் கொள்ளவில்லை.

அங்கே அதிகாரிகள் காந்தியைச் சிறையில் போட்டனர்; கல்லுடைக்க வைத்தனர்; கொலையாளியைப்போல் கொடுமையாக நடத்தினர். அச்சமயம் எல்லாவற்றையும் பார்த்து, எல்லாம் ஈசன் செயல், சேவையின் சோதனை என்றே கருதி நின்றார் அக்காரிகையார்.

அங்கே போனிக்ஸ் எனுமிடத்தில் ஏற்பட்ட ஆசிரமத்தில் கோளாறு ஒன்று நேர்ந்தது. அது காரணமாக அம்மகான் அங்கே பதினான்கு நாள் உண்ணு நோன்புகொண்டு கிடந்தார். கவலைக்கிடமான அத்தறுவாயில் கணவனருகே இருந்து கஸ்தூரிமாதா கடமை ஆற்றினார்.

முடிவில் தென்னுபிரிக்காவிலே சத்தியாக் கிரக இயக்கம் வெற்றி பெற்றது. காந்தி - ஸ்மட்ஸ் ஒப்பந்தம் ஏற்பட்டது. நம்மவருக்கு ஆறுதல் உண்டாயிற்று. உலகமெல்லாம் அவரைப் போற்றியது. இங்குள்ள இந்தியரும் ஏத்தித் தொழுதனர்.

*1915*-ஆம் ஆண்டிலே அம்மகான் இந்தியாவுக்குத் திரும்பினுர். அடுத்த வருஷம் ஸாபர்மதி ஆசிரமம் உதித்தது. அந்த ஆசிரமத்தில் முதல் முதல் சேர்ந்தவர் கஸ்தூரிபாய். அப்போது ஆசிரமத்தில் இருபதின்மர். எல்லாரும் கஸ்தூரியையே தாயாகக் கொண்டனர்.

தீண்டாதாரையும் ஆசிரமத்தில் சேர்த்துக் கொள்ள ஏற்பாடு ஆயிற்று. எல்லாரும் சமபந்தியாகப் போஜனம் செய்யவேண்டும். அதுபற்றி ஒரு புகைச்சல் கிளம்பியது. ஆசிரமத்திற்கு உரிய பணவுதவி நின்றது. ஆசிரமவாசிகளிலும் சிலர் அனுகூலமாக இருக்கவில்லை. கஸ்தூரி பாயும் ஒரு மாதிரியாக இருந்தார். உடனே காந்தி ஏழுநாள் பட்டினி கிடந்தார். அதன் காரணம் யாருக்கும் தெரியாது. முடிவில் கஸ்தூரியின் பூரண சம்மதம் கிட்டவே, பட்டினியை விட்டார் அப்பெரியார்.

பின்பு சம்பரான் ஜில்லாவிலே ஏழைகளுக்கு உழைக்க முற்பட்டார் மகாத்மா. அப்போது கஸ்தூரிபாய் ஓர் ஊன்றுகோல்போல் உதவினுர்.

1921-ஆம் ஆண்டிலே இங்கு ஒத்துழையா இயக்கம் கண்டார் அந்த உத்தம புருஷர். அதனால் ஆறுவருஷ தண்டனைக்கு ஆளானார். உடனே கஸ்தூரிபாய் மனந்தளராமல் அவர் ஸ்தானத்தில் நின்று, தேசமக்களுக்கு அரிய அறிக்கையொன்று விடுத்தார். தாயின் திருவாசகம் எனும் தலைப்பில் அதனைக் காணலாம்.

1930-ஆம் ஆண்டு மீண்டும் ஒரு போராட்டம் துவக்கினார் காந்தி; 1932-லும் அவ்வியக்கம் தோன்றி நடந்தது. அப்போதும் கஸ்தூரி தமக்குரிய பங்குகொண்டு பிரகாசிக்கலானார்.

1924-ஆம் ஆண்டிலே தேசத்தில் ஹிந்து-முஸ்லிம் சச்சரவு உண்டாயிற்று. இருவருக்கும் சமரஸம் உண்டாக்க விரும்பி, ஒரு தவம் போல் (1924 ஸெப்டம்பர்) டில்லியிலிருந்து 21 நாள் பட்டினி விரதம் கொள்ளலானார் புருஷோத்தமர். அப்போது கஸ்தூரிபாய் அருகே இருந்து முன்னம் தம் கணவருக்காக யமனுடன் சாவித்திரி வாதாடியதேபோல், வாதாடினார்.

காந்தி பிழைத்தார், உலகம் களித்தது, மாதாவும் களித்தார். அப்படி ஒரு தரமா, இரண்டு தரமா, காந்திமகான் பட்டினி நோன்பு கொண்டது? பன்முறையாம். எப்போதும் பர்த்தாவின் உடனிருந்து சுசுருஷை பலவும் புரிந்துவந்தார் நம் அன்னை.

1932 ஜனவரி 15ஆம் தேதியன்று அன்னையை அரசாங்கம் சிறை செய்து ஆறு வாரம் காவலிலும் போட்டுவைத்தது.

அதிலிருந்து தாயார் விடுதலையானதுதான் தாமதம். மீண்டும் அவரை அதிகாரிகள் கைதி செய்தனர், ஆறு மாதகாலம் கடுஞ்சிறையில் போட்டனர். தேசத்திற்கு ஆபத்து நேரும்போதெல்லாம் சிறைக்கு முன்னின்றார் அன்னையார்.

ஸாபர்மதி ஆசிரமம் 1933-ஆம் ஆண்டு கலைவுண்டது. இரண்டு ஆண்டு சென்றதும் வார்தா நகருக்கு அருகே சிவக்கிராமத்தில் புதிதாக ஆசிரமமொன்று கண்டார் கண்கண்ட தெய்வமான காந்தி. அந்த ஆசிரமத்தின் பொறுப்பு நம் அன்னையைச் சார்ந்ததாயிற்று. அது பற்றி ஒருவர் எழுதுவது :

"கஸ்தூரிபாயைக் குறித்து எதுவும் பிரபலம் ஆவதில்லை, எதுவும் பத்திரிகையில் வருவதில்லை. சிவக்கிராம ஆசிரமம் வாழ்வினுக்குக் கஸ்தூரியே தாரகம். கஸ்தூரிபாய் மணி சிறந்த மாதரசி; இந்தியாவின் பொக்கிஷமுமாம். காந்தியின் சேவையை உலகம் அறியும். கஸ்தூரியின் சேவையும் தியாகமும் அபாரமே!"

"கஸ்தூரிக்கு இணையான வாழ்க்கைத் துணைவியை எங்கும் காண்பதரிது" என்று அமெரிக்கரொருவர் தம் பத்திரிகையில் வரைந்துள்ளார்.

ராஜ கோட்டையில் சத்தியாக்கிரகம் நடந்தபொழுதும் கஸ்தூரி மாதா சிறைக்குள் குதிக்க நேர்ந்தது. இதுபற்றி மகாத்மா எழுதியிருப்பது:

"போராட்டத்தில் என் மனையாள் சேர்ந்து கொண்டதுபற்றி ஏதும் எழுத நான் எண்ணியதில்லை. கொடுமையான தோஷம் கூறப்பட்டதனால், சிறிது எழுதலானேன். என் மனைவி இதில் சேரவேண்டுமென எனக்கு உத்தேசம் இருந்ததில்லை. அவளுக்கோ வயது ஆகி விட்டது. சிறைவாசம் தாங்க முடியாது. மணி பென் எனும் குமாரி சிறைப்பட்டதைக் கேட்ட வுடனே, தானும் சிறைபுக வேண்டுமென்று கஸ்தூரி என்னைக் கேட்டாள். உடம்பு தள்ளாதே, வேண்டாம் என்றேன். பரவாயில்லை என்றாள் கஸ்தூரிபாய். ராஜகோட்டையில் பிறந்தவள் அல்லவா? தானும் சிறைபுகவேண்டு மென்று அவளுக்குப் பட்டது."

கஸ்தூரி அன்னை சிறையில் இருந்தபொழுது தான், சாகுமளவும் உண்ணா நோன்பு கொள்ள லானார் காந்தி. இது விஷயம் கஸ்தூரிக்கு எட்டியது. முன்னறிக்கை இல்லாமல் நோன்பு கொள்வதா என்று கஸ்தூரி சொல்லி யனுப்பினார் காந்திக்கு. ஆண்டவன் ஆணை அது என்று காந்தி பதில் கொடுத்தார்.

இனி, அந்த நோன்பு கொண்டதும், "உன்னை என் பக்கத்தில் இருக்கச் செய்யுமாறு சம்ஸ்தானத்தை வேண்டட்டுமா ?" என்று கஸ்தூரியை மகாத்மா கேட்டனுப்பினார். இதற்கு யாது பதில் கொடுத்தார் கஸ்தூரி அன்னை ?

"வேண்டாம், சமஸ்தானத்தை வேண்டிக் கேட்க வேண்டாம். தினம் அவரைப் பற்றிய

தகவல் கிடைத்தால் போதும். இத்தனை நாளாக அவரைக் காப்பாற்றிய கடவுள் இன்றும் காப்பாற்றுவார்."

பின்பு சமஸ்தானத்துக்கும் காந்திக்கும் சமரஸம் ஏற்பட்டது உடனே நோன்பைக் கை விட்டார் காந்திமகான். ராஜீயச்சிறையாளரும் உடனே விடுதலை பெற்றனர்.

1942-ஆகஸ்டு 9-ஆம் தேதியை யார் மறக்க முடியும்? அன்றுதான் மாதா கைதியானார். அப்போது பம்பாயிலே பிர்லா மாளிகையில் தங்கியிருந்தார் அத்தாயார்.

மேலே கண்டவாறெல்லாம் கஸ்தூரி அன்னை தவங்கிடக்கலானார். தம் நலங் கருதியா? அன்று அன்று. மற்று தேச நலங்கருதியேயாம்.

பம்பாயிலே சிறையுண்டு பூனாவிலே காவலில் கிடந்த பின், இரு முறை இருதயக் கோளாறு கண்டதாக 1943 மார்ச் 19-ஆம் தேதி பம்பாய் கவர்ன்மெண்ட் அறிவித்தது.

மீண்டும் அத்தகைய நோய்கண்டதாக 1943 டிசம்பர் 4-ஆம்தேதி மற்ருேர் அறிக்கை கூறிற்று அதன்மேல், லண்டனிலே காமன்ஸ் சபையில் கேள்வி பிறக்கலாயிற்று. நோய்கொண்டுள்ள கஸ்தூரியை விடுவிக்கவேண்டும் என்பதே கேள்விகளின் கருத்தாம். ஆயினும் இந்தியா மந்திரி இணங்கவில்லை.

மறுபடியும் இருதயநோய் என்று 1943 டிசம்பர் 20-ஆம் தேதி இன்னோர் அறிக்கை உதித்தது. அதன்மேல், கணவருடன் ஆகாகான்

மாளிகையில் இருப்பதே கஸ்தூரிக்கு நலமாமென இந்தியா கவர்ன்மெண்டார் ஓர் அறிக்கை இட்டனர்.

தேக நிலையைப் பார்க்கையில் அம்மாதாவை விடுவித்தல் வேண்டுமென டில்லி சட்டசபையில் ஸ்ரீமான் தேசமுகர் வற்புறுத்தினர். இதற்கு அரசாங்கம் செவி சாய்க்கவில்லை.

என்ன செய்யலாம்! வேண்டிக் கேட்கலாம். வல்லமையுள்ள அரசாங்கம் இரங்கவில்லை. அரசாங்கம் விடுதலை செய்யுமுன், நமனுர் தோன்றி விடுதலை செய்தார் பாவம், பாவம்!

## 9. தாயின் திருவாசகம்

தென்னாபிரிக்காவிலிருந்து திரும்பிய காந்தி மகான் கொஞ்சகாலம் சமூக சேவை புரிந்தார். அப்பால் தேச சேவையில் முனையலானுர். அதுபற்றி 1922-ஆம் வருஷம் காந்திமகான் சிறைபுக நேர்ந்தது. அச் சமயம் தேச மக்களுக்குக் கஸ்தூரிபாய் விடுத்த செய்தி :—

“அன்புவாய்ந்த என் தேச மக்களே! மாதரே! என் பிரிய கணவர் ஆறு வருஷம் தண்டனைக்கு ஆளா யிருக்கிருர். நீண்டகால அத்தண்டனை கண்டு எனக்கு ஓரளவு கலக்கம் உண்டு. என்றாலும், அத் தண்டனையைக் குறைக்க நமக்குச் சக்தியில்லாமலில்லை. தவிர, கால கெடுவினுக்குமுன் அவரை விடுவிக்கவும் நம்மிடம் வகையுண்டு. இது கருதி நான் ஆறுதல் எய்துகிறேன்.

"இந்திய மக்கள் விழித்தெழ வேண்டும். காங்கிரஸ் நிர்மாண திட்டங்களைப் பூர்த்தி செய்யப் பிரமாதமாக முயலவேண்டும். அங்ஙனம் செய்தால், நாம் அவரை விடுவிக்க முடியும். அஃதுடன் சென்ற பதினெட்டு மாத காலமாக நாம் என்ன லக்ஷ்யங் கருதிப் போராடித் துன்பம் அடைகிறோமோ அந்த லக்ஷ்யத்தையும் அடைந்துவிட முடியும்.

"எனவே பரிகாரம் நம் கையில் இருக்கிறது. நம் முனைப்பில் நாம் தவறினால், அக்குற்றம் நம்முடையதாம். ஆதலின், எனக்காக அனுதாபங் காட்டுவோரையும் சரி, என் கணவரிடம் மதிப்பு வைத்துள்ளோரையும் சரி, நான் வேண்டிக் கொள்வது என்னவென்றால், நிர்மாண திட்டங்களில் முழுக் கவனமும் முயற்சியும் செலுத்திப் பலனடைய வேண்டும் என்பதேயாம்.

"நிர்மாண திட்டங்களிலே, நூல் நூற்றல், கதர் இரண்டையுமே விசேஷமாக வற்புறுத்தியுள்ளார் என் கணவர். அந்த இரண்டிலும் நாம் வெற்றி யடைந்தால், பாமர மக்களின் பொருளாதாரக் கஷ்டம் தீரும் என்பது நிச்சயம். அத்துடன் தேசத்தின் ராஜீய அடிமைத்தனை நீங்குமென்பதும் திண்ணம். எனவே காந்திஜியின் தண்டனை கண்டு, முதல்முதலாக இந்தியர் கொடுக்கவேண்டிய பதில் என்னவென்றால் :—

(1) ஒவ்வோர் ஆணும் பெண்ணும் அந்நிய ஆடையைக் கைவிடவேண்டும்; கதர் ஆடையே தரிக்கவேண்டும்; பிறரையும் கதர் ஆடை தரிக்கச் செய்தல் வேண்டும்.

(2) ஸ்திரீகள் அனைவரும் மதக் கடமையாக நாள்தோறும் நூற்கவேண்டும்; நூற்ற நூலைச் சேகரிக்க வேண்டும்; பிறரையும் நூற்கச் செய்தல் வேண்டும்.

## 10. ஊருக்குப் பிறந்தவர்

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் என்பது ஒரு வசனம். இதற்கு ஏற்ற எடுத்துக்காட்டு மகாத்மா காந்தி. இளவயதில் மேனாடு சென்று, பாரிஸ்டர் பட்டம் பெற்றுத் திரும்பிய காந்தி முதலில் தமக்கென வாழத் தொடங்கினார். திருஞானசம்பந்தரை ஆண்டவன் தடுத்தாட்கொண்டதுபோல், அவரை நம் இந்திய சமூகத்தின் பரிதாபநிலை தடுத்தாட்கொண்டது.

தென்னாப்பிரிக்கா சென்ற அப்பெருமான் அங்குள்ள நம்மவரின் நிலைகண்டு தொண்டாற்றத் தொடங்கினார். பின்னர் இப்பாரத பூமிக்கு வந்து சேர்ந்ததும், தேச மாதா அவரை ஆட்கொண்டாள். கொண்டதும் சிறிது சிறிதாகச் சுகபோகங்களையெல்லாம் நாளடைவில் முற்றத் துறந்தார்; பரநலமே பெரிதெனக் கொண்டார்; அல்லும் பகலும் அறுபது நாழிகையும் தேச சிந்தனையே செய்து நின்றார்;

ஏழைமக்களைப் பாதுகாக்கவே கங்கணம் பூண்டார்.

அத்தகைய பெரியாரின் வாழ்க்கைத் துணைவியும் கணவருடன் இரண்டறக் கலந்து இனிய சேவையில் இறங்கலானார். தென்னாப்பிரிக்காவிலே தொண்டில் பண்பட்டவர் அல்லவா? அவர் குடும்பம் நாலைந்துபேருடன் நிற்கவில்லை. நாற்பதுகோடி மக்களும் அவரது குடும்பத்தினராயினர். காந்தி தம்பதிகள் தேச சொத்தாகி விட்டனர். தேசத்தின் கஷ்ட நஷ்டங்கள் அவருடைய கஷ்டநஷ்டங்களாயின.

காந்தி மகானுக்கு நேர்ந்த சோதனைகள் ஒன்று இரண்டா? அனந்தமாம். பதிபக்தியில் கஸ்தூரி அன்னை பரிமளிக்கத் தொடங்கினார்; தம் வாழ்வையும் தம் குடும்ப வாழ்வையும் கைவிட்டுத்தேச வாழ்வையே பெரிதாக மதிக்கலானார். ஆனதுபற்றி பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையாக நடந்துவந்தார். 1920-ஆம் ஆண்டிலே இத்தேசத்தில் ஒத்துழையா இயக்கம் உதித்தது.

அப்போது பலரும் சிறைபுக நேர்ந்தது. கஸ்தூரி மாதாவும் சிறைபுகுந்தார். அப்பால் பற்பல காரணங்களை முன்னிட்டு மகாத்மா பல சமயங்களில் உண்ணா நோன்புகொள்ள நேர்ந்தது. அவ்வேளையில் உயிருக்கே ஆபத்து நேருமோ என்று பலரும் அஞ்சினர். அத்தருணங்களி லெல்லாம் அன்னை கஸ்தூரி உடனிருந்து, பதிக்குரிய சுசுருஷை பலவும் பண்ணி

ஞர்; மகாத்மாவுக்குப் பக்கபலமும் ஊட்டினர். கணவரது லக்ஷ்யமே தமது லக்ஷ்யமெனக் கொண்டார்.

பின்னர் (1939) ராஜகோட்டை சமஸ்தானத்திலே மக்களுக்குத் துன்பம் நேர்ந்த காலையில், சாகும்வரையில் உண்ணு நோன்பு கொள்வதாக மகாத்மா முனைந்தார். மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறி நடக்க மன்னன் முயன்றதே அந்நோன்பினுக்குக் காரணம். அப்போது சத்தியாக்கிரகம் செய்த காரணமாக அன்னை சிறையில் கிடந்தார். அதுசமயம் காந்திக்கு வயது எழுபது.

தள்ளாத வயதினிலே கணவன் அத்தகைய நோன்பு கொள்ள, மனைவி அது சமயம் சிறையில் கிடக்க, அத்தேவியின் மனநிலை எவ்வாறிருக்கும்? வாசகரே ஊகித்துக்கொள்ளலாம். மனைவி சந்திரமதியைக் கொலைக்களத்தினுக்கு அரிச்சந்திரன் இட்டுச் செல்லுகையிலும், அரசனது ஆணைப்படி சந்திரமதியின் சிரத்தைச் சேதிக்க அச்சத்தியவான் துணிந்த காலையிலும், சந்திரமதி யாது நினைந்தாள்? யாது சொன்ஞள்? அவ்வாறே அன்னை கஸ்தூரியும் நினைத்தார், கலங்கா உறுதிகொண்டு விளங்கினர்.

கஸ்தூரிமாதா சிறை சென்றது ஒரு முறையா? இரு முறையா? சிறைவாச காலத்திலே மனநிலையும் உறுதியும் இம்மியும் தளரவில்லை. எனினும் உடல் நிலை மட்டும் ஒடுங்கி வந்தது; சுருங்கிவந்தது.

முடிவாக அம் மங்கையர்க்கரசியார் சிறை சென்றது 1942-ஆம் ஆண்டு ஆகஸ்டு 9-ஆம் தேதி. அதற்கு முன் தினங்களில் பம்பாயிலே காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடியது. எட்டாந் தேதி அக்கூட்டம் தீர்ந்ததும், மறுதினம் ஒரு பொதுக் கூட்டத்திலே மகாத்மா பேசுவதாக இருந்தது. அரசாங்கத்தார் இரவிலேயே அவரைச் சிறை செய்து கொண்டுபோய்விட்டனர்.

அது கண்ட அன்னை, "அவர் பேச முடியாவிட்டால் என்ன? அடியேன் இருக்கிறேன். அவருக்குப் பதிலாகப் பேசுவேன்" என்று அறிவித்தார். அவ்வளவுதான் தாமதம். பியாரேலால், டாக்டர் சுசிலா நாய்ர், இவர்களுடன் அன்னையையும் போலீஸார் கைதி செய்து, ஆகாகான் மாளிகைக்குக் கொண்டுபோயினர்.

அம்மாளிகைதான் காந்தி தம்பதிகளின் காவல் தலம். சிறையில் கணவனுடன் ஒன்ருக வாழ்ந்திருந்தும் என்ன? எழுபத்தைந்து வயது ஆகிவிட்டதனுல், தமது கிழப் பருவம் ஒரு புறம், உடல்நோய் ஒரு புறம், மனநோய் ஒரு புறம், தேசத்தின் தவிப்பு ஒரு புறம், தாயைப் பெரிதும் வாட்டின. அடிக்கடி நோய் முற்றியது; குணமுகமும் காட்டியது. எனினும் முடிவிலோ கொள்ளைகொண்டு போய்விட்டது. யார் செய்த பாவம் இது? எவர் செய்த தீவினை இது? சிறையில் மரணம், சிவனுக்குத்தான் பிரீதியா? தாயின் பூதவுடம்பை மக்கள் பார்க்கக் கூடக் கொடுத்துவைக்கவில்லை.

## 11. கடைநாள் காட்சி

கஸ்தூரி மாதாவின் கடைக்குட்டி தேவதாஸ் காந்தி. அவர் நம் ராஜாஜியின் மாப்பிள்ளை; "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகையின் ஆசிரியர்; கங்கை திரிவேணி சங்கமத்தில் அன்னையின் அஸ்தியை அர்ப்பணஞ் செய்தவர். பிரயாகை நகரிலிருந்து அவர் விடுத்த செய்தி இது:—

எனக்கும் சரி, காவல் தலத்திலுள்ள என் தந்தைக்கும் சரி, வந்துள்ள அனுதாபத் தந்திகள் - இரங்கல் உரைகள் - எண்ணிறந்தன. அவற்றிற்கெல்லாம் நன்றியுரை மட்டும் கூறினால் போதுமா? அவற்றை அனுப்பினோர் தாம் சொல்ல விரும்பியவற்றை யெல்லாம் சொல்லக் கூடவில்லை. அத்துயரப் புலம்பல்கள் மனத்தை ஈர்க்கும்; எங்கள் குடும்பத்தாருக்கும் அன்னாருக்கும் இடையேயுள்ள அனுதாபத்தையும் தெள்ளெனக் காட்டும்.

ஆதலின் என் தாயாரது மகத்தான கடைநாள் காட்சியின் விவரங்களை அன்னவருக்கு நான் உணர்த்தியாகவேண்டும். நான் மட்டுமே உணர்ந்து உருகுதல் அழகன்று. என்றாலும் பகிரங்கமாக நான் சொல்லக்கூடிய அளவே நான் சொல்ல முடியும்.

சை, என்ன விதி இது! அதன் விளைவுதான் என்னே! இப்படியுமா விதி வந்து சூழும்?

என்று ஆழ்ந்த துயருக்கு ஆளாகிக் கிடக்கிறேன். திடீரென்று தாயாரை இழக்க நேர்ந்ததே என்று விதியையும் நொந்து நைகின்றேன். இத்தகைய மனநிலையை ஒருவாறு சமாளிக்கலாம் என்பதே என் நினைப்பு.

கடைசி நிமிஷம் வரையில் என் தாயார் நினைவு தப்பவில்லை. நிலைமை மோசம் என்று (13-2-44) அரசாங்கம் அறிவித்த காலையில், நோயின் கடைசி கட்டத்திலிருந்து தப்பிவிட முடியும் என்றே அவர் எண்ணியிருந்தார். இருதயம் சரிவர இயங்கவில்லை யாதலின், சென்ற சில நாட்களாகவே குண்டிக்காய் நன்கு வேலை செய்யவில்லை. அத்துடன் ஜுரம் இல்லாத பித்தவாதமும் சேர்ந்துகொண்டது. கொள்ளவே, நோயின் நிலைமை சிக்கலாயிற்று. இரத்தத் துடிப்போ 75·52 ஆகக் குறைந்துவிட்டது. இந்நிலையிலே நோயுடன் போராடிப் பயனில்லை என்று டாக்டர்கள் கைவிட்டுவிட்டனர்.

திங்களன்று மாலை நான் அன்னையினருகு சேர்ந்தேன். அப்போது அவர் வாதைப்பட்டுக் கொண்டிருந்தார். காவல் தலத்திலே கூட இருந்தோர் பக்தி விசுவாசத்துடன் சுசுருஷையெல்லாம் செய்தனர். அதனால் அவருக்கு அவ்வாதையிலிருந்து ஒரு சிறிது ஆறுதல் பிறந்தது. அன்றிரவே அவர் கண்மூடிவிடுவாரென்று டாக்டர்கள் கருதினர். ஆயினும் அவரோ பிழைத்திருந்தார். இம்மண்ணுலகில் அவருக்கு அதுவே கடைசி இரவு. அவ்வேளை அருகிருந்தோர்

அனைவரும் அவருக்கு ஒவ்வொரு விநாடியும் தொண்டு புரிந்து கொண்டிருந்தனர்.

நாங்கள் ஏதேனும் கேட்டால், அரை குறையான பிரக்ஞையுடன் ஆம், இல்லை என்று பதில் சொல்வார்; அல்லது மெதுவாகத் தலையை அசைப்பார். ஒரு சமயம் காந்திஜி வந்தார் அவரருகே. உடனே கையை உயர்த்தி, யாரது? என்று கேட்டார். சுமார் ஒரு மணிநேரம் பக்கத்திலிருந்துகொண்டு காந்திஜி தொண்டுபுரிய அவருக்கு மிக்க ஆசுவாசம் உண்டாயிற்று. அன்னையினருகே காந்திஜி இளையவராகவே தோன்றினார். ஆயினும் காந்தியின் கைகளோ நடுங்கின. அந்நிலையில் தென்னாபிரிக்காவில் நடந்த பழைய சம்பவமொன்று எனக்கு நினைவு வந்தது. அது யாதெனில்,

சுமார் 32 வருஷங்களுக்குமுன் இருக்கும். மூன்று மாதம் சிறைவாசம் செய்துவிட்டு, அன்னை வெளியே வந்தார். உடம்போ மிகமிக இளைத்து ஈர்க்குச்சி போலிருந்தது. ரயிலடியிலே என் பெற்றோரை ஓர் ஐரோப்பியர் - கொஞ்சம் அறிமுகமானவர் - சந்தித்தார். என் தாயாரைச் சுட்டி, 'இது உங்கள் தாயா?' என்று காந்தியை அவர் கேட்டார்.

காலையிலே அன்னையின் நிலை கேவலமாகிவிட்டது. ஆயினும் சாந்தமாகவே இருந்தார். ஒரு சமயம் பிழைக்கலாம் என்றே நம்பியிருந்தார் திங்களன்று. செவ்வாயன்றோ, சரி உலக வாழ்வு இவ்வளவுதான் என்று எண்ணிவிட்

டார். மனம் அமைதியாகவே இருந்தது; கொடு நோயின் சேஷ்டை முற்றி நின்றும், மனம் தெளிவுகொண்டே துலங்கியது. மருந்து எதுவும் வேண்டாமென்று சொல்லிவிட்டார். திங்கள் முதல் ஜலபானமும் இல்லை. ஆயினும் செவ்வா யன்று பகலிலே கங்கை நீர் என்றதும், விரிய வாய்திறந்தார். அந்தக் கங்காமிருதம் சற்றே ஆசுவாசம் அளித்தது.

மாலையிலே மணி மூன்று இருக்கும். என்னைக் கூப்பிட்டனுப்பி, “அப்பா! மகனே! ஒரு நாள் போயாகவேண்டும். இன்றே போனால் என்ன?” என்றார். நானே அவருக்குக் கடைசிப் பிள்ளை. ஆதலின் அவருக்கு என் மீது வாஞ்சை மிகுதி. எனவே என்னையே அவர் சிந்தித்து நின்றார். எல்லோருக்கும் முன்னிலையில் ஒருநாள் போயாகவேண்டும், இன்று போனாலென்ன எனும் வார்த்தையும், இன்னும் அன்பு ததும்பும் சில மொழிகளும் சொல்லி, என்னை விடமுடியாது விட்டகன்றார் என் தாயார்.

அவருடைய உச்சரிப்பு அன்றுபோல் என்றும் தெளிவாக இருந்ததில்லை. அவருடையவார்த்தைகளும் அன்றுபோல் என்றும் கனிவு கொண்டிருந்ததில்லை. உடனே அவர் தம் இரு கரங்களையும் சேர்த்துக் கூப்பிக்கொண்டார்; பிறர் உதவியின்றி எழுந்து உட்கார்ந்தார்; தலையைச் சிறிதே தாழ்த்திய வண்ணம், இயன்ற வரையில் உரக்கத் துதித்தார் ஆண்டவனை. ஆண்டவனே தஞ்சம், அவர் அருளே தேவை என்று ஜபித்

தார்! அடிக்கடி இச் சொற்களே அவர் வாயினின்று வெளிப்பட்டன.

என் கண்ணீரைத் துடைத்துக்கொள்ள அந்த அறையைவிட்டு வெளியே சென்றேன். அப்போது ஆகாகான் மாளிகையின் தாழ்வாரத்திலே "பென்சிலின்" எனும் நவீனமருந்து வந்து சேர்ந்திருப்பதாக அறியலானேன். அம் மருந்தைப் பிரயோகம் பண்ண டாக்டருக்குச் சிறிதும் இஷ்டமில்லை. பித்தவாதம் என்பது கண் மூடுவதற்கு ஒரு காரணம். ஆனால், குண்டிக்காய் முடிவாக வேலை செய்யாமற் போன பிறகு, பென்சிலின் பயன்படாது. தவிர, சமயத்தில் அது வந்து சேரவில்லை. எனினும் பித்தவாதத்துக்கு ஓர் ஆச்சரிய மருந்தான பென்ஸிலின் என்பதை விமானமூலம் தருவித்திருந்தனர்.

மாலையிலே மணி ஐந்திருக்கும். மீண்டும் சென்று, தாயைப் பார்க்கத் துணிந்தேன். அப்போது அவர் புன்னகை செய்தார். இந்த 43 வருஷ காலமாக என்னைக் காத்தது அப்புன்னகையே. தவிர, "கண்ணே! கலங்காதே, தைரியமாய் இரு" என்று கண் மூடுந்தறுவாயில் தாய் தன் மகனுக்குக் கூறும் அன்புரை அளவிட்டுரைக்க ஒண்ணுமோ? மனித உணர்ச்சியில் மாத்ரு வாஞ்சையில் மிக்கவர் என் தாய். எனவே என்னிடம் மட்டும் அவர் அவ்வளவு வாஞ்சை கொண்டிருந்தாரே என்று அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் நினைக்கவேண்டாம்.

அவ்விதம் அவர் புன்னகை புரியவே, பென்ஸிலின் மீது எனக்கு மிக்க சிரத்தை பிறந்தது. டாக்டர்களுடன் பேசி, அம்மருந்தை ஊட்டிப் பார்க்கலாமா என்று ஆவல் கொண்டேன். அம்மருந்தை ஊட்டிப் பார்க்க அவர்களும் இசைந்தனர்; ஆயினும், பலன் கிட்டுமென்று அவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. காந்திஜிக்கு அவ்விஷயம் தெரியவந்தது. பென்ஸிலினை ஊட்டிப் பார்க்க நான் ஆவலாக நின்றதை அவர் அறிந்ததுதான் தாமதம். மாலையிலே தோட்டத்தில் உலாவுவதை அவர் நிறுத்திவிட்டு, என்னுடன் வாதித்தது இது:—

"உன் தாயை இனிக் குணப்படுத்த முடியாது. எத்தகைய ஆச்சரிய மருந்துகள் இருந்தாலும் சரி, அம்மருந்தை ஊட்டியாகவேண்டும் என்று நீ பிடிவாதம் செய்தால், அதற்கு நான் இணங்கத் தயார். ஆயினும் நீ நினைப்பது முற்றிலும் தப்பு. இந்த இரண்டு நாளாக மருந்து வேண்டாமென்று கூறிவிட்டாள்; ஜலபானத்தையும் மறுத்துவிட்டாள். அவள் ஆண்டவன் பாதம் சேரும் சமயம். உனக்கு இஷ்டமிருந்தால் நீ தலையிடு. ஆயினும் நீ கருதும் மார்க்கம் சரியன்று. இதுவே என் யோசனை. சாகுந் தறுவாயிலிருக்கிற நோயாளிக்கு நான்கு அல்லது ஆறு மணிக்கு ஒரு தரம் உடம்பில் வலிதரக்கூடிய மார்க்கத்தில் மனம் வைக்கிறாய் என்பது ஞாபகம் இருக்கட்டும்."

காந்திஜி அவ்விதம் சொல்ல, நான் என்ன வாதிப்பேன்? காந்தியின் யோசனை கண்டதும் டாக்டர்களும் ஆறுதல் கொண்டனர். காந்திஜியுடன் மிக்க ரஸமான அவ்வாதப் போர் நிகழ்ந்தவுடனே அவரை என் தாயார் அழைப்பதாகத் தகவல் வந்தது. உடனே அவர் விரைந்து சென்று தாயைத் தாங்கிக்கொண்டிருந்தோரிடமிருந்து, தாயை வாங்கித் தம் தோளின்மீது சார்த்திக் கொண்டு, செய்யக் கூடிய தொண்டு புரியலானார். ஏனைய பதின்மருடன் சேர்ந்து, அந்தக் காட்சியை நான் நோக்கிநிற்கையில், அன்னையின் முகத்திலே சாயை ஆழ்ந்தது. முற்றிலும் ஆசுவாசம் கொள்ள என் அன்னையார் தம் கைகளை இங்குமங்கும் அசைக்கலானார்.

பின்பு, கண்ணிமைப் பொழுதில் என் தாயார் கண் மூடிவிட்டார். பலர் கண்களினின்றும் நீர் பெருகலாயிற்று. காந்திஜியோ தம் கண்ணீர் வெளியே புலப்படாமல் தடுத்துக் கொண்டார். எல்லோரும் அரை வட்டவடிவமாகச் சுற்றி நின்று, எப்பொழுதும் வழக்கம் போல் சொல்லும் துதிகளைக் கூறித் தொழுதனர். இரண்டு நிமிஷத்துக்கெல்லாம், என் தாயார் அசைவற்றார். அருகேயிருந்த ஒருவர் உரைத்த வண்ணம், நாங்களெல்லாம் சாப்பிட்டாகட்டும் என்றே கண் மூடாமல் காத்திருந்தார் போலும். காவல் தலத்திலே இன்றைய கடைசி போஜனம் மாலை ஆறு மணிக்கு. என் அன்னை கண்மூடியதோ ஏழரை மணிக்கு.

அலகாபாத் நகருக்குப் போகும் வழியில் இவற்றை எழுதுகின்றேன். அவருடைய அஸ்திகளே என்னிடம் உள. அவற்றை நாளைத் திங்களன்று கங்கையில் அர்ப்பணம் செய்வேன். என் அன்னையின் அஸ்திகளில் ஒரு கையளவே என்னிடம் உள. போன வெள்ளியன்று மயானத்திலிருந்து, காவல்தல வாசிகள் சாஸ்திர விதிப்படி பொறுக்கியவை அவை. அவற்றை ஒரு வாழை இலையில் வைத்துப் பூவும் மஞ்சளும் போட்டு அலங்கரித்து கற்பூர ஆரத்தி காட்டி விதிப்படி எடுத்துச் செல்லுகிறேன் எனவே என் தாயாருடன் நான் இப்போது பிரயாணம் செய்கிறேன். நாளைக்கு அப்பாலோ அவர் எங்கே, நான் எங்கே? கங்கையும் யமுனையும் கூடுமிடத்தில் அஸ்தியை அர்ப்பணம் செய்ய வேண்டும் என்பது காந்திஜியின் தெளிவான தீர்ப்பு.

கோடிக்கணக்கான ஹிந்துக்கள் எதனை உத்கிருஷ்டம் என்று நினைக்கிறார்களோ அதுவே உன் தாயாருக்கும் உத்கிருஷ்டமாகும் என்று காந்திஜி எனக்கு உணர்த்தினார். மேலும் அவ்வாறே சங்கமத்தில் அஸ்தியை அர்ப்பணம் செய்யவேண்டுமென்று மாண்புமிக்க பண்டித மாளவியாஜியும் தந்தி கொடுத்திருந்தார். ஆதலின் அவ்வாறே அஸ்தியை அர்ப்பணஞ் செய்ய ஏற்பாடாயிற்று.

அன்னையின் சாம்பலில் பெரும்பாகம் பூனா நகருக்கு அருகே இந்திராயணி நதியில் அர்ப்

பணஞ் செய்தோம். இவ்விதம் செய்வதற்கு விஞ்ஞான சாஸ்திர ஆதாரம் யாதெனு எனக்குத் தெரியாது. எனினும், வேறு விதமான தகுந்த உபாயம் இல்லாதிருக்கும்பொழுது, சம்பிரதாயப்படி நடக்க வேண்டியிருக்கிறது. போன வெள்ளியன்று சூரியோதயத்துக்கு முன்னே அந்நதிக்கரையிலிருந்த எனக்கும் சரி, என்னுடன் இருந்தோருக்கும் சரி, நதியிலே சாம்பலைக் கரைத்தல் பயபக்தியான உயர்ந்த சடங்காம்; தகனத்துக்கு மறுதினம் சேகரித்த சாம்பலிலே ஒரு சிறிதளவு காவல் தலத்தில் இருக்கிறது. அத்துடன் ஐந்து கண்ணாடி வளையல்களும் உள்ளன. தீ மூட்டிய ஜ்வாலையில் அவ் வளையல்கள் இருந்தும், மறுதினம் அப்படியே உடையாமல் இருந்தன.

காவல் தலத்திலே 1942 ஸெப்டம்பரில் என் அன்னைக்கு நோய் கண்டது. அப்பொழுது தான், இருதயக் கோளாறுகள் முதல்முதல் தோன்றின. சென்ற நாலைந்து வருஷகாலமாகவே அன்னையின் உடம்பு ஒரு மாதிரியாகத் தான் இருந்தது. ஆயினும் அப்போதெல்லாம் இருதயக் கோளாறு தென்படவேயில்லை. 1942 ஸெப்டம்பரில் நோய் கண்டபின்னர், அவர் பழைய சுகநிலை அடையவேயில்லை. சிறை வாழ்க்கையின் மிடுக்கை அவர் உடலும் சரி, உள்ளமும் சரி, தாங்க முடியவில்லை என்பது மிகைபடக் கூறுவதாகாது.

இதற்கு முன்னம் எவ்வளவோ தரம் என் அன்னையார் சிறைவாசத்துக்கு ஆளாயிருந்தார். ராஜகோட்டையிலே ஒரு கிராமத்திலே அவர் தனிக்காவலில் இருக்கவும் நேர்ந்தது. அப்போதே அனர்த்தம் நேரலாமென்று தோன்றியது. ஆயினும், ஆகாகான் மாளிகையிலே கடைசியாக அன்னையார் காவலில் இருந்ததே முற்றிலும் மிக்க சோதனையாக முடிந்தது. உடலும் சரி, மனமும் சரி, வாடிக்கொண்டே வந்தன.

மாளிகை போன்ற கட்டடமும் சுற்றுப்புற நிலைமைகளும் என் அன்னைக்கு ஒத்துக்கொள்ளவில்லை. அத்தகைய நிலைமையில் அன்னையார் எப்போதும் இருந்ததில்லை. போதாக்குறைக்கு மாளிகையைச் சுற்றி இரும்பு முள்வேலி ஆயுதந் தாங்கிய பாராக்காரர். இவையும் கூடிக்கொண்டன கோர விளைவுக்கு. சேவாக்கிராமத்தில் தாழ்ந்த கூரையுள்ள இடத்தில் வசிப்பதே உகந்ததாகும் என்றே அவர் எண்ணியிருந்தார். அந்த இடம் போய்ச் சேர வேண்டுமென்றும் ஆவலாக இருந்தார். போன வருஷமே என்னிடம் அவ்வாறு சொன்னார். இதனை வெளியிடுவதனால் என் அன்னையாரின் கௌரவத்துக்குப் பாதகம் விளைக்கிறேன் என்பதில்லை.

காலகெடுவில்லாத காவல் என்பதும் அன்னையாருக்கு இன்னும் ஒரு பெரும் பாரமாகவே இருந்தது. சரீர சுகத்துக்கு அரசாங்கம் என்ன தேடிக்கொடுத்தும் என்ன? அவரது மனத்துக்கும் சரி, உயிருக்கும் சரி, சாந்தி அளிப்பதாக

இல்லை. இவ்வளவுதானே? அவருடன் நெருங்கிப் பழகிய பலர் உள்பட ஆயிரக்கணக்கான மக்கள் அத்தகைய காவலில் வைக்கப்பட்டிருப்பதும் அவரை வாட்டிவந்தது. எனவே அவர் துயரம் பின்னும் பெருகலாயிற்று. மற்ற அனைவரையும் விடுவிப்பதானால், தாமும் பாபுவும் ஆயுள் அளவும் காவலில் கிடக்கத் தயாரெனவும் அவர் துதித்துவந்தார் ஒரு வருஷத்துக்கு மேலாக.

நோய் முற்றி, மோச நிலை தோன்றிய பொழுது, காவலிலிருந்து விடுவித்திருந்தால், அன்னைக்குக் குணம் ஏற்பட்டிருக்குமா என்று சிலர் கேட்கலாம். கட்டாயம் குணம் ஏற்பட்டிருக்கும் விடுவித்திருந்தால். தவிர, விரும்பிய காலையில் காவல்தலஞ் சென்று வசிக்கவும், வசதி வழி இருந்திருக்க வேண்டும். அத்தகைய ஏற்பாடு செய்திருந்தால் அஃது அன்பு முறையாகவும் இருந்திருக்கும்.

ஆயினும் என்ன? ஆண்டவன் பாதம் சேர்வதற்கு இம் மண்ணுலகிலிருந்து விடுதலை கிடைத்ததே தவிர, காவல் தலத்திலிருந்து விடுதலையுண்டு என்ற நம்பிக்கை பிறக்கவும் வழி இல்லாது போய்விட்டது. உண்மை இப்படி இருக்க கஸ்தூரிபாயை விடுவிக்கப் பல தடவைகளில் இந்திய கவர்ன்மெண்டார் விரும்பினர், ஆயினும் அவர் அதற்கு இணங்கவில்லை என்று இந்தியா கவர்ன்மெண்டின் ஏஜெண்டாக அமெரிக்காவில் உள்ளவர் (ஸர் கிரிஜா சங்கர வாஜபேயர்) சொன்னது கேட்டு எனக்கு

ஆச்சரியமும் பிரமிப்பும் ஏற்படுகின்றன. அவருடைய வார்த்தை அரசாங்க அறிக்கைக்கு நேர் மாறுபட்டது. எனவே அந்த அறிக்கைக்கு மாருக அரசாங்க ஊழியரொருவர் பேசியதற்கு இதுவரை யாதொரு சமாதானமும் நான் காணவில்லை

எங்களுக்கு இரங்கல் உரை அனுப்பியவர்களுக்கும் சரி, எங்களுடன் மௌனமாகத் துக்கம் கொண்டாடுவோருக்கும் சரி, என்னுடைய மூன்று சோதரர்கள், உறவினர்கள் இவர்களின் சார்பாக ஆழ்ந்த அபிமானத்தை அறிவித்துக் கொள்வேன். எங்களுடன் பரம துக்கம் கொண்டாடும் தேச மக்களான லட்சோபலட்சக்கணக்குள்ள சோதர சோதரிகளைத் தவிர வேறு சோதர சோதரிகள் எங்களுக்கு ஏது? நான் இங்ஙனம் விரிவான நன்றியுரை கூற நேர்ந்தது சமயத்தைக் கருதி.

என் அன்னை இம்மண்ணுலகை விட்டுப் பிரிய நேர்ந்த காலையில் காந்திஜி எவ்வாறு இருந்தார் என்று ஒரு. வார்த்தை. சோர்ந்து போனவர்போல் அவர் தென்பட்டார். வாழ்க்கையில் அக்குறை ஏற்பட்டதுபற்றி அவர் துயருறுகிருர். ஏனென்ருல் அவருக்கு இன்றளவும் உபபலமாக இருந்தது அன்னையே. தவிர காந்திஜி எய்தியுள்ள நிலைக்கும் அன்னையே பெரிதும் காரணம். எனினும் ஞான பக்குவ நிலையிலேயே அவர் மனமுளது. மனக்கிளர்ச்சிக்கு அவர் ஆளாகவில்லை. மனத்தையும் மனக்

கிளர்ச்சியையும் ஒரு கட்டுக்கு உள்ளடக்கி வைப்பவர் அல்லவா? அவரைச் சுற்றிலும் துக்கமயந்தான். வெள்ளியன்று நானும் என் சோதரரும் அவரை விட்டுப் பிரிந்த காலையில், கண்ணீர் வடிப்பதற்குப் பதிலாக வழக்கம் போல் தமாஷாகப் பேசினார். அவர் சுகமாக இருப்பதாகவே நினைக்கிறேன்.

## 12. ஆவி பிரிதல்

சென்னை நகரில் 'ஸண்டே டைம்ஸ்' எனும் ஆங்கில வாரப் பத்திரிகை யொன்று பிரசுரமாகிறது. அதன் விசேஷப் பிரதிநிதி யொருவர் பூனா நகரிலுள்ள ஆகாகான் மாளிகையில் இருந்தார். கஸ்தூரிபாயின் ஆவி பிரியுங் காலத்தில் தாம் கண்ணால் கண்டதை அவர் பின்வருமாறு எழுதுகிறார்:—

1944-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் 22-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை சிவராத்திரி தினத்தின் பிற்பகலிலே ஆகாகான் மாளிகையில் சாவு உலாவிக் கொண்டிருந்தது. சென்ற ஐம்பதாண்டுகளாக மகாத்மா காந்தியின் வாழ்க்கைத் துணைவியாயிருந்த கஸ்தூரிபாய்க்குத் தொண்டைக் குழியிலே உயிர் துடித்து நின்றது. உடம்பிலே வீக்கம், அவயவங்களிலே அசதி, குண்டிக்காயிலே ஸ்தம்பிதம், இருதயப் பைகளிலோ பித்தவாதம் - அன்னையின் நிலைமை இது.

வாதையுடன் மிக்க சிரமங்கூட. சுவாசம் வாங்க கஸ்தூரி மாதா கஷ்டப்பட்டார். நான்

கணக்காக அவர் அருகே யிருந்து சுசுருஷை செய்துகொண்டிருந்த மகாத்மாவோ தாழக் குனிந்து, "பெண்ணே! உன் ஆவி துடிக்கிறது. உடலைவிட்டோடவும் பார்க்கிறது. சாந்தியுடன் ஈசன் பாதம் சேர்வாயாக" என்றார். உடனே உயிர்த் துடிப்பு சற்றே நின்றது. சிரமம் இல்லாமல் கஸ்தூரிபாய் சுவாசம் வாங்கினார். அவர் முகத்திலே ஓர் அமைதியும் தோன்றியது.

உயிர் வாழ்க்கையில் உடனிருந்து உதவிய தேவியின்பால் சென்ற 25 ஆண்டுகளாகக் குதூகலம் கொள்ளாதவரும், உள்ளத்தேயுள்ள உயரிய அன்பை வெளியே காட்டாதவருமான மகாத்மா காந்தி தம் தேவியின் தலையைத் தம் மடிமீது தாங்கிக்கொண்டு, தலையை மெதுவாகத் தடவிக் கொடுக்கலானார். வாழ்க்கைத் துணைவி பிரிவதன் பலாபலனை அப்போதுதான் அவர் உணர்ந்தார் போலும்!

'பூனா ஆகாகான் அரண்மனையிலே மாலை 7-35 மணிக்கு மிஸஸ் கஸ்தூரிபாய் காந்தி காலகதி யடைந்துவிட்டதாக, பம்பாய் கவர்ன்மெண்ட் வருத்தத்துடன் அறிவிக்கிறது' என்று அன்று மாலை தந்திகள் எங்கும் பறந்தன. பூனா நகரில் மட்டுமா, தேசம் முழுதும் அமைதியொன்று - மரத்துப்போன துக்கத்துடன் - பரவலாயிற்று.

கஸ்தூரிபாய் காலகதியானார் என்று கேட்டவுடனே, பூனா நகரில் எவரும் அதனை நம்பவில்லை. ஏனென்றால், கஸ்தூரி அன்னைக்கு

ஒரு வாரத்திலே இரு முறை இருதயத் துடிப்பு நேர்ந்தது. அவருடைய குழந்தை குட்டிகள் அவரைப் பார்க்க வந்துளர் என்று போன டிசம்பர் 4-ஆம் தேதியன்று அரசாங்கம் அறிவித்தவுடனே, சரி காலகதி சமீபித்துவிட்டது, இன்னும் கொஞ்ச நாள் தான், என்று பலரும் முடிவு கட்டிவிட்டனர்.

அவருக்கோ தள்ளாத வயது. அவ்வயதில் கொடிய நோயுடன் எத்தனை நாள் போராட முடியும்? தவிர, கணவருடன் சேர்ந்து, தொல்லைக்கும் துன்பத்துக்கும் இடமான சேவையில் அவர் காலங் கழிக்க நேர்ந்தது. ஆதலின் அத்தகைய உயிர் எத்தனை நாள் நீடிக்கும்? தன் மிடுக்கைக் காட்டித்தானே தீரும். அல்லாமலும் வாழ்நாளின் கடைசிக் காலத்திலே அவரோ சிறையில் கிடக்கிறார். சிறை வாழ்க்கையும் அனர்த்தமாக முடியுமல்லவா? போதாக் குறைக்கு மாளிகைச் சிறை வாசத்திலிருந்து உயிருடன் விடுதலை ஏது, என்றும் பலர் சொல்லிக்கொண்டிருந்தனர்.

எனவே 1943 டிசம்பர் முதலே கஸ்தூரி பாய் கண்மூடி விட்டார்; இல்லை தொண்டைக் குழியில் உயிர் துடிக்கிறது, மேல் சுவாசம் வாங்குகிறது, இல்லை இல்லை, நேற்றே காலகதி யாகிவிட்டார், என்று பலவாறான வதந்திகள் பூனா நகரில் நிமிஷந்தோறும் உலவி வந்தன. ஆனால் ஆண்டவன் கருணை முன்னெல்லாம்

அந்த வதந்திகள் பொய்யாயின. அதன்மேல் மக்கள் நிம்மதி கொண்டனர்.

ஆதலின் சாபத்தீடான செவ்வாயன்று அத்துக்கச் செய்தி எட்டியதும், முன்போல் வதந்தியாக முடியக் கூடாதா, வதந்தியாகவே முடியும், என்று பலரும் நம்பிநின்றனர். எனினும் இத்தனை நாளாகக் கருணை காட்டிய கடவுள் மீண்டும் கருணைகாட்டவில்லை. விதிவலி வந்து சூழ்ந்துகொண்டது. கஸ்தூரி அன்னை மறைந்துவிட்டார்.

செவ்வாயன்று காலை முதலே கஸ்தூரிபாய் பிரக்ஞை தவறிவிட்டாரென எல்லாரும் நம்பலாயினர். அப்பாலோ அன்னையின் உடம்பு தான் ஜில்லிட்டது; அவயவங்கள் தாம் அசையவில்லை. ஆனால் நினைவு தப்பவில்லை, உயிர் போய்க்கொண்டிருக்கிறது என்ற உணர்ச்சியுடன் இருந்தார், சீக்கிரம் கண் மூடவேண்டுமென்றும் கருதியிருந்தார் என்று புலப்படலாயிற்று.

செவ்வாயன்று பிற்பகலிலே டாக்டர் கர்னல் ஷா என்பார் வந்தவுடன், கையைத் தூக்கி நமஸ்காரம் செய்யக் கஸ்தூரிபாய் கருதினர். ஆயினும் கையைத் தூக்க முடியவில்லை. அவயவங்கள் அயர்ந்துபோயின. எனினும் அவரது ஆன்மாவோ புன்னகை பூத்தது. டாக்டரின் ஊழியத்துக்கு நன்றி கூறவேண்டுமல்லவா?

அன்று மாலை மணி ஏழு அடித்தது. கொதிக்கிற வெந்நீரில் மருந்தூசியொன்று கல்கத்தாவி

லிருந்து விமானத்தில் வந்த பென்ஸிலின் எனும் மருந்தை யூட்டத் தயாராக இருந்தது. காந்திஜி என்ன, கஸ்தூரிபாயின் குமாரர்களென்ன, தாயற்ற பேத்தி என்ன, இன்னும் காவல் தலத்திலிருந்த பிறரென்ன, எல்லாரும் அருகே இருந்தனர். மணி ஏழரை ஆயிற்று. உடனே ரகுபதி ராகவ ராஜா ராம் எனும் துதிகீதம் கிளம்பியது. அங்ஙனம் பஜனை நடந்துகொண்டிருக்கையில் ஆண்டவன் பாதம் சேர்ந்துவிட்டார் கஸ்தூரி பாய்.

பின்பு, சிலர் சொல்லும் வண்ணம், கஸ்தூரிபாயின் கன்னத்தைத் தடவிக்கொடுத்த வண்ணம், "பெண்ணே! பெண்ணே!" என்றார் காந்திஜி. பதிலே இல்லை.

சிறைத் தலத்திலே வசித்த மக்களிடம் துயரும் துக்கமும் குடிகொண்டதை எண்ணிப் பார்க்க இயலுமோ? விரித்துரைக்கத்தான் ஒண்ணுமோ? கண்ணீர் பெருக்கெடுத்து வருவதைத் தடுத்துக் கொள்ளவே பலரும் முயன்றனர். விம்மி விம்மி அழுகை வந்ததையும் பலர் அடக்கிக்கொண்டனர். அக்காட்சியை வார்த்தை கொண்டு விளம்ப முடியுமோ?

மலர்களால் மூடிக்கிடந்த கஸ்தூரிபாயின் உடலருகே காந்தி வீற்றிருந்தார். ஒவ்வொருவராக நண்பரும் உறவினரும் உள்ளே வந்தவுடனே அன்னைக்குரிய கடைசி வணக்கஞ் செய்தனர். அவர்கள் துக்கம் விசாரிக்கையில் காந்தி மகான் கலங்காத மனநிலைகொண்டு துலங்கினார்.

பாடையை முதல்முதல் தூக்க முயன்றவர் மகாத்மாவே. பின்பு பிறர் தூக்கிக்கொண்டு, மாளிகையின்மதிள்சுவரருகினுக்குச் சென்றனர். தமது கையினுல் மகாதேவதேசாய்க்கு மகாத்மா சமைத்திருந்த சமாதியருகே அன்னையின் பூதவுடலை இறக்கினர். காந்திஜி சற்றே பின்வாங்கி, எரிக்கும் வெய்யிலில் நின்றுகொண்டிருக்க, வேதியரொருவர் ஈமக்கிரியைகள் செய்யலானுர்.

ஆசிரமவாசிகள் ஒவ்வொரு மத நூலிலிருந்தும் தெய்வத்துதி பாடினர். பின்னர் கோவிந்தா, கோவிந்தா என்ற கோஷம் ஓங்க, கஸ்தூரி பாயின் கடைசிக் குமாரர் தேவதாஸ் காந்தி கொள்ளி வைத்தார். வைக்கவே, கஸ்தூரி பாயின் பூதவுடலை அக்கினி பகவான் புசிக்கலானுன். மொத்தம் தோழரும் சுற்றத்தாருமாக நூற்றுவர் உடனிருந்தனர் அப்போது.

காலையிலே பத்துமணி முதல் பிற்பகல் நான்குமணி வரையில் காந்திமகான் அவ்விடத்திலேயே இருந்தார். சற்றே இளைப்பாறலாமே என்று யாரோ சொன்னதும், "என்ன! இவ்வளவு சீக்கிரமா நான் போய்விடுவது? 'இத்தனை வருஷ காலமாக நாம் வாழ்ந்து வந்ததை இவ்வளவு சீக்கிரமா மறந்து விட்டீர்கள்?' என்று கஸ்தூரிபாய் கேட்பாளே" என்று பதில் சொன்னுர்!

பூனு நகரில் பிரசுரமாகும் "மராட்டா" பத்திரிகையில் பின்வரும் விஷயம் காணப்படுகிறது:

நமக்கு எட்டும் தகவலைப் பார்த்தால், கஸ்தூரிபாயின் தகனக்கிரியை விஷயமாய் மகாத்மா காந்தி, பம்பாய் கவர்ன்மெண்டு, இந்தியா கவர்ன்மெண்டு இவர்களுக்கு இடையே பலத்த கேள்விப் பிரதி கேள்வி பிறந்ததாகத் தோன்றுகிறது. மூவருக்கும் இடையே பிரமாதமான பேச்சு நடந்த பின்னரே, ஆகாகான் மாளிகையிலேயே தகனக்கிரியை நடப்பதென முடிவாயிற்று. தவிர அன்பர்களையும் உறவினரையும் அச்சமயம் உடனிருக்கும்படி அனுமதி பிறந்தது.

அதன் பின்புதான் ஆகாகான் மாளிகையின் கதவு திறக்கப்படலாயிற்று. சுமார் ஒரு நூறு பேர் உள்ளே வர முடிந்தது.

கனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார், என். ஸி. கேள்கர், டி. வி. கோகலே இவர்களும் இன்னும் மற்றவர்களும் உள்ளே வந்தது கண்டு, கஸ்தூரிபாயின் படுக்கையருகே இருந்த காந்திமகான் எழுந்தார். பரஸ்பரம் வந்தனை வழிபாடுகள் நடந்தன. அச்சமயம் இருந்த நிலையை என்னென்று சொல்லுவது? காந்திமகான், "விசித்திரமான இத்தகைய சந்தர்ப்பத்திலே நாம் சந்திப்பது என்ன வாழ்க்கை!" என்றார். இதில் எவ்வளவோ அர்த்தம் உண்டு.

## 13. சுமங்கலி

இந்துக்களின் இல்வாழ்க்கைக் கொள்கையே கொள்கை! கணவன், மனைவி இருவருக்கும் உடல் வெவ்வேறு. ஆயினும் உயிர் ஒன்றே. மானிடருக்குக் கண்கள் இரண்டு என்றாலும் இரண்டும் சேர்ந்து ஒன்றையே நோக்கும். ஒரு கண்ணினால் ஒன்றையும், மற்றொரு கண்ணினால் மற்றொன்றையும் பார்த்தல் இயலாது. இல்வாழ்க்கையிலே தம்பதிகளுடைய நோக்கும் அப்படித்தான்.

புருஷன் இறந்த பின்னர், பூவையர் உயிருடன் இரார். கணவன் மரித்தது கண்டதும், ஆவி துடிப்பர்; ஏன்? தானாகவே ஆவி அகன்று விடும். அத்தகைய பக்குவம் வாய்க்காத வனிதையர் உடன்கட்டை ஏறி உயிரைவிடுவர். இன்றேல், பதி போயின பின்பு, பஞ்சேந்திரியங்களை அடக்கித் துறவியரேபோல் திகழ்வர்.

இனி, புருஷனுக்குமுன் பரகதி போகவே மாதர் பலரும் விரும்புவர். பொற்றாலியோடு எவையும் போம் என்ற வண்ணம், புருஷன் மரித்தபின் என்ன உண்டு பூவையருக்கு? ஆதலின் முன்னதாகவே போதல் ஒரு பாக்கியம். அதாவது சுமங்கலியாக, சௌபாக்கியவதியாகப் போதலே சிறப்பாம். அச்சிறப்பு அனைவருக்கும் கிடைத்தல் அருமை!

மஞ்சளோடும் குங்குமத்தோடும் போனாள், பூவோடும் பொன்னோடும் போனாள்; புத்திரர் கிரியை செய்ய, புருஷன் இருந்து எல்லாம் நடத்தப் பாக்கியவதியாகப் போனாள், என்று உலகம் சொல்லும். அங்ஙனம் போவோரைத் தெய்வாம்சமாகக் கொள்வர் இந்துக்கள்; ஆண்டு தோறும் சுமங்கலிப் பிரார்த்தனை நடத்துவர்; வீட்டிலே எத்தகைய சுப காரியங்கள் நேரினும், சுமங்கலி பூஜை நடத்தாமலிரார்.

காந்தியை மகாத்மா என்றால், மாளவியாவைத் தர்மாத்மா என்பர். தர்மாத்மா எனும் சிறப்பு மகாத்மாவே அளித்ததென்றும் பலர் பேசுவர். தர்மாத்மா மாளவியாவைக் கண்டால், தமையனைக் கண்டதுபோல் எழுந்து நின்று வணங்கி ஆசனமளித்து உபசரிப்பார் காந்தி மகான். மகாத்மா காந்தி புருஷோத்தமர் என்றால், அப்புருஷோத்தமரால் போற்றப்படும் பேறு படைத்தவர் பண்டித மதன மோகன மாளவியா. மாளவியா வேத வித்து, பிராமணோத்தமர்; இந்தியாவிலே பழுத்த தேசாபிமானி - இப்போது உயிருடன் உலவுவோரில் மூத்த தேசாபிமானி - மாளவியாவே. அத்தகைய பண்டித மாளவியா நம் கஸ்தூரி மாதாவின் காலகதி கேட்டதும் திடுக்கிட்டார், துயருற்றார், காந்திக்கு ஆறுதல் கூறினார். அத்துடன் சௌபாக்கியவதியாகவே மறைந்தார், சுமங்கலியாகவே போனார், இது பெரிய விசேஷம் என்று பாராட்டினார்.

சுமங்கலியிலும் சாமானியமான சுமங்கலியா? எழுபதாண்டு நிரம்பிய தீர்க்க சுமங்கலி. அவ்வளவு வயதான தீர்க்க சுமங்கலிகள் அருமை. சுபகாலங்களிலே பழுத்த சுமங்கலிகளே முன்னதாகக் கௌரி கல்யாணம் என்று கூறி வாழ்த்துவர். இராமபிரான் சீதாதேவியுடன் கானகம் புகுந்த காலத்தில், அங்கிருந்த ரிஷிபத்தினிகள் - தீர்க்க சுமங்கலிகள் - சீதாதேவிக்குக் குங்குமத் திலகமிட்டு வாழ்த்தினர். ஆதலினுற்றான், விதி வசத்தால் இராவணனிடம் சிறைகிடக்க நேர்ந்தும், யாதோர் ஊறுமின்றி அத்தேவி மீட்சி கொண்டாள்.

அன்றியும் இனியொரு விசேஷம் பாருங்கள். அன்னையின் பூதவுடலை அக்கினிக்கு அர்ப்பணஞ் செய்தபொழுது, கைகளிலே கண்ணுடி வளையல்கள் இருந்தன. எதனையும் புசித்துப் பசியாறும் அத்தீக்கடவுள் அவ் வளையல்களை ஒன்றும் செய்யவில்லை. அவை அப்படியே இருந்தன அழியாமல் சிதையாமல்! அதுகண்டு ஆச்சரியமடைந்த மக்கள் - ஆகாகான் மாளிகையில் காவல் கிடக்கும் மக்கள் - அவ்வளையல்களை எடுத்து மஞ்சளும் மலரும் சாத்தி நாள்தோறும் பூசித்துவருகின்றனர். இதற்கு அவர் புதல்வர் தேவதாஸ் காந்தியின் வாக்கே சான்று.

புத்தர்பிரானது பல், அஸ்தி இவற்றில் ஒன்றைக் கொண்டு ஆலயங்கள் (விஹாரங்கள் எனப்படும்) அமைத்தல் புத்தமதக் கோட்பாடு. அப்பிரானது சின்னங்களைப் பெற்றுச் செல்

லவே சீனதேசத்திலிருந்து முன்னம் யாத்திரிகர் பலர் இந்தியாவுக்கு வந்து போயினர் என்பது சரித்திர உண்மை. கஸ்தூரிபாயின் அஸ்தி, சுமங்கலியின் சின்னம் என்று கேட்டவுடனே, அலகாபாத் நகரவாசிகள் ஆயிரக்கணக்கில் - ஏன் லட்சக் கணக்கில் - ஊர்வலமாக உடன் சென்றனர் கங்கைக்கு.

இச்சந்தர்ப்பத்தில், நம் தமிழக டாக்டர் ராஜாஜி தம் மருமகனுக்கு விடுத்த செய்தியை இங்கே குறிப்பிடுவோம்:

"ராணியாக விளங்கவே அம்மாள் பிறந்தாள்; விநோதமும் கஷ்டமும் நிறைந்த நடை கொண்டு, அப்பதவி எய்தினாள்; நம்முடைய உணர்ச்சிகள் உயிருடன் உள்ளோருக்குப் பயன்படுதல் வேண்டும். பூதவுடலை விட்டுப் போனோருக்கு வேண்டியதில்லை. அம்மாள், மகாதேவ தேசாய் இருவரின் ஆன்மாவும் சாந்தியடையுமாக!"

சுமங்கலியாகப் போனோருக்கு வருந்தாமல், உயிருடன் உள்ளோருக்கு உதவுவோமாக என்கிறார் ராஜாஜி. உயிருடன் உள்ளோரின் நலத்தை நாடியே சுமங்கலி பூஜை புரிதல் வழக்கமாம்.

## 14. இரங்கல் உரை

திருவிளையாடலிலே பிட்டுக்கு மண்சுமந்த கதை ஒன்று. வைகை நதியில் திடீரென வெள்ளம் புரண்டது. மனைதோறும் ஆளொருவன் வந்து அணைகட்ட வேண்டும் என்று அரிமர்த்தன பாண்டியன் ஆணையிட்டான். அவ்வாறே தலைக்கட்டுதோறும் ஒருவன் வந்தான் அணை கோல.

மதுரையா நகரிலே வந்தி என்று ஓர் ஏழை. அவளுக்கு ஆண்டிக்கு இல்லை. கூலிக்கும் ஆள் கிடைக்கவில்லை. பிட்டுச்சுட்டு அதனை விற்று ஜீவிப்பதே அவள் தொழில். ஆண்டவனே நீதான் கதி என்று அவள் இரந்தாள். உடனே ஆண்டவன் ஒரு கூலியாக வந்தான்; பிட்டையெல்லாம் வாங்கித் தின்றான். ஆயினும் வந்தியின் பங்கான அணையைக் கட்ட முனையவில்லை. ஒரு கூடை மண்ணைப் போடுவது, உடனே வந்து பிட்டைத் தின்பது இப்படிக் காலங் கழித்தான் அக் கூலி.

அணை கட்டி முடிந்ததா என்று பார்க்க வந்தான் பாண்டியன். எல்லோருடைய பங்கு அணையும் கட்டப்பட்டாய்விட்டது. வந்தியின் பங்கு மட்டும் கட்டப்படவில்லை. அது கண்டான் பாண்டியன், கன கோபங்கொண்டான்;

வந்தியின் வேலையாளை வருவித்தான்; பிரம்பு கொண்டு முதுகில் அடித்தான்.

உடனே ஆளைக் காணோம். ஆனால் அரசன் அடித்த அடியோ அண்டபிண்ட சராசரங்கள் அனைத்தின்மீதும் பட்டது. அரசன் முதுகிலும் தாக்கியது. எல்லோரும் அடிதாளாமல் தங்கள் தங்கள் முதுகைத் தடைத்துக்கொண்டனர். இதுவே, பிட்டுக்கு மண் சுமந்த கதையின் சாரம்.

கஸ்தூரி அன்னை கண்மூடினார் என்று கேட்ட அளவில், உலகமே துயருற்றது. அமெரிக்காவிலுள்ள மக்கள் - லட்சோப லட்சக் கணக்கான மக்கள் - திடுக்கிட்டனர், தேம்பினர், துயருற்றனர். பிரபல அமெரிக்கர் பெரிதும் வருந்தினர்.

தென் ஆபிரிக்காவிலுள்ள நம்மவரோ, அன்னையாரா அகன்று போனார்? என்று ஆறாத் துயர்கொண்டு துடித்தனர்; அன்னையின் அரு கில் இருக்கவில்லையே என்று அழுது அரற் றினர்.

இங்கிலாந்திலுள்ள நம்மவரோ, நாம் துர்ப்பாக்கியரானோம் என்று மனமுளைந்தனர். லண்டன் டைம்ஸ், மாஞ்செஸ்டர் கார்டியன் போன்ற பத்திரிகைகள் சரம வாக்கியங்கள் வரைந்து, அன்னையின் அருங்குணங்களைப் போற்றின, புகழ்ந்தன.

இந்திய மக்களின் மனத்துயர் சொல்லப் போமோ? வடக்கே இமயம் முதல் தெற்கே குமரி வரையில் உள்ளார் அனைவரும் உள்ளம்

உடைந்தனர்; உறுதொழில் விட்டனர்; கடைகளை மூடினர், அலுவல்களைக் கட்டி வைத்தனர், கண்ணீர் பெருக்கினர், கருத்தழிந்தனர்.

ஆங்காங்கே ஜனங்கள் பிரம்மாண்டமாகக் கூடினர், துக்கங் கொண்டாடினர்; மாணவர்கள் தம் பள்ளிகளை விட்டகன்றனர், தொழிலாளர் தம் வேலைகளை விடுத்தனர்; கலாசாலைகள் மூடப்பட்டுக் கிடந்தன; தொழிற்சாலைகளும் அடைபட்டுக் கிடந்தன.

நகர சபைகள் என்ன, ஜில்லா சபைகள் என்ன, பஞ்சாயத்துச் சபைகள் என்ன, கல்விச் சங்கங்கள் என்ன, இதர பல சங்கங்கள் என்ன, எல்லாம் துயர் மிக்கன; புலம்பல் தீர்மானம் செய்தன; சபைக் கூட்டத்தை ஒத்திப்போட்டன.

அவை கிடக்கட்டும், ராஜாங்க சபை துக்கத் தீர்மானஞ் செய்து, அலுவல்களை நிறுத்தி வைத்தது; வங்காளம், பஞ்சாப், சிந்து, ஒரிஸா, எல்லைப்புற மாகாணம் இந்தச் சட்ட சபைகளும் துக்கத்தின் அறிகுறியாகத் தம் தம் ஜோலிகளைச் சிறிது நேரம் ஒத்திவைத்தன. டில்லி சட்ட சபை மட்டும் துக்கம் கொண்டாடவில்லை. அதன் தலைவர், யாது காரணமோ அறியோம், அன்னையின் காலகதி குறித்து யாதொரு பேச்சு மூச்சும் கூடாதென்று செங்கோல் செலுத்தி விட்டார்!

இந்தியாவிலே துயர் தாக்காத இடம் ஏது? அதிகார வர்க்கமும் உள்ளூற வருந்தியதென்றே

விளம்பவேண்டும். ராஜப்பிரதிநிதி, சேனாபதி, ஸர் கிரிப்ஸ் முதலியோரும் மகாத்மாவுக்கு அனுதாபத் தந்திகள் அனுப்பினர்.

பண்டித மாளவியா - பரமவேதிய வித்தகர் - அறிக்கை யொன்று இட்டார் அன்னையின் ஞாபகார்த்தமாக. அங்ஙனமே (1944, மார்ச்சு மாதம் 5ஆம் தேதி) தேசமெங்கும் மகாநாடுகள் நடந்தன; அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேறின. அன்னையின் ஆன்மா சாந்தியடையத் துதிகள் நடந்தன; பிரார்த்தனைகள் ஈடேறின. வடகோடியிலிருந்து தென்கோடி வரையில் அன்னையின் பிரிவு கேட்டுப் பேதுறுதார் இல்லை. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் அல்லவா?

## 15. குணாதிசயங்கள்

ஆண்டவனுடைய குணாதிசயங்களை யாரே அளவிட்டுரைக்க இயலும்! அன்னை கஸ்தூரி பாயின் குணாதிசயங்களும் அப்படியே. இரண்டொன்றை மட்டும் இங்கே எடுத்தியம்புவோம்.

நம் தேசத்திலே சுதந்தரப் போராட்டம் ஒன்று; இரண்டா? அனந்தமாம். காந்தி மகான் தலைமையிலே பல நடந்தன. 1930-ஆம் ஆண்டில் ஒப்பற்ற ஒரு போராட்டம். பெரிய பெரிய தலைவர்களெல்லாம் சிறையில் கிடந்த காலம்.

கோடீசுவரரின் மகளிரும் லட்சப் பிரபுக் களின் மனைவியரும் பெருமக்களின் புத்திரி களும் பிரபுக்களின் பிரிய மாதரும் அப் போராட்டத்தில் முனைந்தனர்; ஊர்வலமாக வீதிகளிலே சென்றனர் சுதந்தர கோஷத்துடன்.

அப்போதோ அவசரச் சட்ட அமுல். அதிகாரிகள் இட்டதே தீர்ப்பு. ஊர்வலம் கூடாதென்று கட்டளை பிறந்தது. மாதர் பார்த்தனர், என்ன விபரீதம் என்றனர், வருவது வருக என்றனர், தேசீயக் கொடிக ளுடன் வீதிவலம் வந்தனர்.

அவ்வளவுதான். தடியடிப் பிரயோகம் தாண்டவம் கொண்டது; பலரும் அடிபட்ட னர்; ஆஸ்பத்திரிகளுக்குத் தூக்கிச் செல்லப் பட்டனர். குஜராத் நாட்டிலே போர்ஸத் என்று ஒரு நகரம். அங்கே அடிபட்ட மாதர் காயமுண்டு வைத்தியசாலையில் கிடந்தனர்.

அம்மாதருக்கோ தடியடியினால் பெருத்த காயமுண்டு. அதிகார ஆர்ப்பரிப்புக் கண்டு அச்சம் பிறக்கவில்லை: அன்னை கஸ்தூரியைப் பார்க்க வேண்டுமென்று ஆசை பிறந்தது.

“நாங்கள் காயமுண்டு கிடப்பதில் வருத்த மில்லை. போர்ஸத் நகரவாசிகளுக்கு ஊக்கம் உயரவேண்டும். இதற்கு உடனே அன்னை வரவேண்டும்” என்று தந்தி பேசினர்.

அப்போது அன்னை யாது செய்துகொண் டிருந்தார்? தோழியின் வீட்டிலே தாகசாந்தி செய்துகொள்ள, கோப்பை ஒன்றைக் கையில்

ஏந்தி நின்றார். தந்தியைக் கண்டதுதான் தாமதம். தாக சாந்தி ஆகவில்லை. கோப்பை யைக் கீழே வைத்தார்; உடனே புறப்பட லானார்.

பார்த்தாள் தோழி. என்ன இது? தாக சாந்தி செய்துகொள்ளவில்லையே. இது கிடக் கட்டும். உங்களுக்கோ இப்போது இரத்தச் சோகை. எப்படி நெடுந்தூரம் பிரயாணம் செய்வீர்கள்? உடம்பு கெட்டுவிடுமே, வேண் டாம், நான் போகிறேன், நீங்கள் இங்கே இருங்கள், உடம்பைப் பார்த்துக்கொள்ளுங் கள்" என்றாள். டாக்டருடைய கருத்தும் இதுதான் என்று மன்றாடினாள், தடுத்தாள்.

கஸ்தூரிபாய் என்ன செய்தார்? என்ன சொன்னார்? மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக் கொண்டார். பெண்ணே! போலீஸைத் தைரி யமாக எதிர்த்து நின்ற அக்குழந்தைகளை நான் பார்க்க வேண்டும். நான் அவர்களருகே இச்சமயம் இருத்தல் வேண்டும்; அவர்களுக்கு உற்சாகம் ஊட்டவேண்டும். பாபு (காந்தி) சிறையில் கிடக்கிறார். இல்லாவிட்டால் அவரே அவர்களின் பக்கம் இருப்பார். அவர் இல்லை. அவருக்குப் பதிலாக நான் போயாதல் வேண்டும். தயவு செய். தடுக் காதே" என்று கூறி உடனே ரயிலுக்குப் புறப்பட்டார்.

அங்ஙனமே போர்ஸத் சென்றார் அன்னை. அனைவருக்கும் ஊக்கம் ஊட்டினார். அவரைக்

கண்டதும் எல்லாருக்கும் உற்சாகம் ஓங்கியது. பின்னர் ஊர் ஊராக அன்னை சென்றார். ஆங்காங்குள்ள மக்களுக்குத் தைரியம் கொடுத்தார், இன்னுரை வழங்கினார், புன்முறுவல் முகம் காட்டினார்.

அப்பிரயாணத்திலே அவர் நடியாத் நகரம் சேர்ந்தார்; சிறையில் கிடந்த காங்கிரஸ் தலைவருக்குப் பதிலாக எல்லாக் காரியங்களையும் பார்த்தார்; ஒரு நிமிஷ நேரங்கூட ஓய்வு கிடையாது. உடம்போ வாடியது, வதங்கியது. நோயோ முற்றியது. அருகே இருந்தோர் கவலை கொண்டனர்.

அவ்வளவில் டாக்டர்கள் வந்தனர், அன்னையின் உடம்பைப் பரீட்சித்தனர்; ஓய்வு கொள்ள வேண்டுமென்று உணர்த்தினர்; இல்லையேல் உயிருக்கு ஆபத்து நேருமென்று உரைத்தனர். அது கேட்டு அனைவருக்கும் அன்னையைப்பற்றிய கவலை அதிகரித்தது.

அன்னை என்ன சொன்னார் :—"எனக்கோ ஓய்வு வேண்டும் என்று உரைக்கிறீர்கள். எனக்கோ அப்படிப் படவில்லை. உடம்பு வாசியாகவே இருக்கிறது. பாபுவைப் பின்பற்றி நடப்பதுதானே என் வாழ்க்கையின் லக்ஷியம். அவர் சிறையில் கிடக்கும் சமயத்தில், அவரைப் போல் உழைக்கச் சமயம் வாய்த்துளது. வேறு சமயம் - இத்தகைய நற்சமயம் - வாய்க்குமோ? ஓய்வா? கனவிலும் கருதேன். ஆண்டவன் இருக்கிறான்!"

குஜராத்திலே சத்தியாக்கிரகம் நடக்கிறது. போலீஸின் தொல்லை தலைமிஞ்சி விட்டது; கிராமாதிகாரியின் மிடுக்கும் சகிக்க முடியாததாகிவிட்டது. ஆகவே கிராம மக்களில் பலர் தங்கள் வீடுவாசல்களைத் துறந்தனர்; விளைந்து நின்ற காணி பூமிகளைக் கைவிட்டனர்; குழந்தை குட்டிகளையும் ஆடுமாடுகளையும் மட்டும் இட்டுக்கொண்டு, வேற்றிடம் போயினர்.

அங்ஙனம் சென்ற இருநூறு குடும்பங்கள் ஒரு மைதானத்தில் தங்கின; குச்சுப் போட்டுக் கொண்டன; அல்லது மர நிழலையே குச்சாகக் கொண்டன; அல்லது ஆகாயத்தையே கூரையாகக் கருதித் திறந்த வெளியில் தங்கின.

தங்கின இடமோ அப்பப்பா ஒரே நரகமாயிருந்தது. தாழ்ந்த குச்சுவீடு. மனிதரும் மாடும் பக்கத்தில் பக்கத்தில். எங்கும் சேறு; சகதி. துர்நாற்றம். கொசுக்களோ ஏராளம் மானிட இரத்தத்தை உறிஞ்சுகின்றன. குழந்தைகள் வாந்திபேதியில் மரிக்கின்றன. அல்லது கொடிய ஜுரத்தால் சாகின்றன. பெற்றோருக்கோ கொடிய சருமநோய். குடிக்க நல்ல நீர் கிடையாது; குளிக்கவோ வசதி கிடையாது. குடும்பங்களின் துயரமோ, கூறுந்தரமன்று.

அந்த இடம் சேர்ந்தார் கஸ்தூரிபாய். “இங்கேயே சின்னாள் இருப்பேன். என்

சோதர சோதரிகள் நரகவாதைப் படுகையில் நானும் பங்கு கொள்வேன். இவர்களை விட்டு எப்படிப் போவேன்? சத்தியாக்கிரக வீரசிகா மணிகளின் மத்தியில் இருப்பதே என் கடமை, என் பொறுப்பு, என் நோக்கம்" என்றார்.

சின்னாள் அங்கிருந்தார் அன்னையார். ஒரு நாள் ஏழைக் குடியானவனொருவன் அத்தாயிடம் வந்தான்; மாதாவே என்று கும்பிட்டான்: மேலும் சொல்லுவான்:—

"அன்னாய்! கேள். என் கதி இது. எல்லாவற்றையும் இழந்துவிட்டேன். எனக்கு ஒரே மகன். ஜுரத்தால் அவன் மாண்டுவிட்டான். என் மனைவி இன்று காலை இறந்துபோனாள். இந்தச் சிசு-மூன்று மாதக் குழந்தை-தாயின்றி அலறுகிறது. இதனைக் காப்பார் யார்? எனக்கோ என்னவோ நோய் பிடித்தாட்டுகிறது. என்னைப் பற்றி எனக்குக் கவலையில்லை. இச்சிசுவை என்ன செய்வேன்? எவ்விதம் பராமரிப்பேன்?" என்று பேசினான்.

பார்த்தாள் தாய். கண்களிலே நீர் ஊற்றெடுக்கிறது. அதனைத் தடுத்துக்கொண்டார். "அப்பனே! ஈசுவரன் இருக்கிறான். கவலைப் படாதே. நீ ஒரு பாவமும் செய்யவில்லை. கடவுள் உன்னைக் காப்பார். ஆண்டவன் அருள் தலைகொடுக்கும். பாபு கேட்டால், உன்னை அன்னை பாரதியின் வீரப் புதல்வன் என்று மெச்சுவார். நான் இருக்கிறேன். என்னாலான உதவி யெல்லாம் புரிவேன். உன்னையும் காப்

பேன், உன் சிசுவையும் பார்த்துக்கொள்வேன். என்னோடு வா, கலங்காதே. வீரன் நீ. தைரிய மாய் இரு" என்று அருளினார்.

காந்திமகான் வெள்ளாட்டுப் பால் குடித்து வருகிறார். எங்ஙனம் குடித்து வரலானார்? யார் சொன்ன யோசனை அது? எச்சமயத்தில் சொன்னது? பார்ப்போம்.

நெடுநாளைக்கு முன்னமேயே, பால் குடிப்ப தில்லை என்று காந்தி விரதம் கொண்டார். ஒரு சமயம் அவருக்குப் பிரமாதமான நோயொன்று கண்டது. டாக்டர்களோ பால் குடிக்கவேண்டு மென்று சொல்லினர்; குடியாவிட்டால் நோயும் குணமாகாது, உடம்பும் போய்விடும் என்றனர். என்ன செய்வார் காந்தி? பால் குடிப்பதில்லை என்ற விரதம் இருக்கிறது. விரதம் பெரிதா? உடம்பு பெரிதா? பால் குடியேன் என்று சொல்லிவிட்டார் அவர்.

டாக்டர்கள் திகைத்தனர்; ஏனையோரும் கவலை கொண்டனர். பார்த்தார் கஸ்தூரி அன்னை. கணவனது உடலைக் காப்பது மனைவி யின் கடமை. விரதமோ பங்கமுறக் கூடாது. அவர் பாலும் பருகவேண்டும்:

"பால் குடிப்பதில்லை என்றால், பசும்பால் அல்லது எருமைப் பால்தானே. வெள்ளாட் டுப் பால் குடித்தால் விரதத்துக்கும் பங்கம் இல்லை, உடம்பும் பிழைக்கும்" என்று அன்னை கஸ்தூரி யோசனை சொன்னார். டாக்டர்கள் வியந்தனர், மெச்சினர், வழிகாட்டிய அன்னை

யைப் போற்றினர். காந்திக்கும் எடுத்துச் சொல்லினர். அதன்மேல் வெள்ளாட்டுப் பால் மகாத்மாவின் உணவுப் பொருள்களில் ஒன்றாயிற்று.

கல்யாணன் என்று ஓர் இளைஞன். குஜராத் வாசி. ஊர் ஊராகப் போவதில் அவனுக்கு விருப்பம். ஆங்காங்கே காணும் அதிசயத்தைப் பத்திரிகைகளுக்கு எழுதியனுப்புவது அவன் ஆவல். சுதந்தரப் போராட்டச் சமயத்திலே நாலைந்து வருஷம் தன் வீட்டுக்கே போகவில்லை. நாடோடியாக நல்ல ஊழியம் புரிந்துவந்தான். கஸ்தூரி பாயுடன் நெடுநாள் சுற்றுப் பிரயாணம் செய்தான்.

இருவரும் பார்டோலி நகரத்தில் இருந்தனர். கல்யாணனின் அன்னை வந்து, மகனைக் கண்டாள்; கட்டிக்கொண்டு அழுதாள்; கண்ணே! வீட்டுக்கு வா என்று கெஞ்சினாள். அவனுக்கோ விருப்பமில்லை. தாய் சொல்லைத் தட்டவும் துணிவில்லை, கஸ்தூரி மாதாவை விட்டுப் பிரியவும் மனமில்லை. பார்த்தாள் அவன் தாயார்; அன்னை கஸ்தூரியிடம் சென்றாள். பின்னர் நடந்த பேச்சு இது:

"எனக்கு இவன் ஒரே பிள்ளை. எங்களோடு அவன் இருக்கவேண்டும். அவனைப் பிரிந்து வாழ எங்களால் முடியவில்லை."

"நல்லது! உனக்கு ஒரு பிள்ளையைப் பற்றிக் கவலை. எனக்கோ மூன்று பிள்ளைகள். மூவரும் என்னை விட்டுப் பிரிந்துளர். தேசத்

துக்குச் சேவை செய்கின்றனர். உனக்குப் புத்திரிகள் உண்டா ?''

"ஒரு மகள் உண்டு. அவளுக்கு விவாகம் ஆகிவிட்டது. கணவனுடன் வாழ்கிருள். தூர தேசத்தில் இருக்கிருள்."

"நீ பாக்கியசாலி. பெண் ஒன்று இருக்கிறது. என் பெண்ணை நீ பெருமை பேசிக் கொள்ளலாம். அம்மா அம்மா என்று மகள் கூப்பிடுவதும் அன்பாக இருப்பதும் பாக்கியமே. எனக்குப் பெண்ணே இல்லை. ஹரிஜனப் பெண் ஒருத்தியை சுவீகாரம் கொண்டேன். அவளும் இப்போது என்னருகே இல்லை. பாபுவும் இல்லை. என் பிள்ளைகளும் இல்லை. எல்லோரும் தேச சேவை செய்கின்றனர். தேச சேவை கருதி எல்லாரும் என்னை விட்டுப் பிரிந்திருக்கின்றனர். தேச சேவை என்று கருதி, நான் களிப்பாகவே இருக்கிறேன், அவர்கள் என்னை விட்டுப் பிரிந்திருந்தாலும்!''

கல்யாணனின் தாயார் என்ன பதில் சொல்வாள் ?

மக்களின் மனக்கோயிலில் மாதா வசித்து வருகிருர். எனினும் புறத்தே கோயிலொன்று சமைக்கப் பெரியார் கருதியுளர். அரிவையருக்கு அறிவு ஊட்டவும், ஆபத்தில் உதவவுமே அக் கோயில். அதற்கு எழுபத்தைந்து லக்ஷம் ரூபாய் தேவை. பண்டித மாளவியா உட்பட நாற்பது

பாரதப் பெருமக்கள் நிதி சேர்த்து வருகின்றனர். காந்திமகான் கருதும் வண்ணம் அக்கோயில் கிளம்பும். நிதி திரண்டு வருகிறது. அன்னையின் ஞாபகார்த்தமான ஆலயம் விரைவில் வடிவுகொள்ளும்.

## 16. முடிவுரை

அன்னை கஸ்தூரி அரிய கற்பரசி. முன்னாளிலே கற்பரசியரில் ஒருத்தி வேடனை எரித்தாள்; ஒருத்தி எழுபரித்தேரோனைத் தடுத்தாள்; ஒருத்தி மும்மூர்த்திகளையும் சிசுவாக்கிச் சீராட்டினாள். அன்னார் மறக்கற்பே கொண்டு துலங்கினர். சதி கஸ்தூரியோ அறக்கற்பே கொண்டு விளங்கினாள். எங்ஙனம்?

தென்னாபிரிக்காவிலே அன்னையுடன் நெருங்கிப் பழகிய ஆங்கில மாது. ஆங்குள்ள அதிகாரிகளின் அக்கிரமத்தை அறிந்த அரிவை, ஸ்ரீமதி போலக் என்பாள் பேசட்டும்:—"திரான்ஸ்வால் மாகாணத்திலே கஸ்தூரிபாய் சிறை சென்று வெளிக் கிளம்பியதும் அத் தேவியைக் கண்டு பேசினேன். சிறையிலே உடல் மட்டுமன்று. உள்ளமும் வாடி வதங்கியது. சிறையனுபவம் துன்பமயமே. எனினும் கஸ்தூரிபாயிடம் மனக்கசப்போ வெறுப்போ நான் காணவில்லை. மற்று ஓர் அமைதியும் பொறுமையுமே கண்டேன்!"

எனவே தமயந்தி, நளாயினி, அருந்ததி இந்த உத்தமிகளையும் கஸ்தூரி விஞ்சிவிட்டாள்

அன்ரோ ? தமயந்தியும் சீதையும் சாவித்திரியும் சத்தியவதியும் தம் வாழ்க்கையில் சிறிது காலமே துன்பத்துக்கு ஆளாயினர் ; நீண்ட காலம் சுக போகந்துய்த்தனர் ; இன்றேல் துன்பம் என்பதைக் கனவிலும் காணுதவராகவே இருந்தனர். கஸ்தூரிக்கோ காந்திக்கு மாலையிட்ட நாள்முதல் ஒரே துன்பந்தான், தொல்லைதான், தியாகந்தான். இன்பம், துன்பம் என்பன கேவலம் மன விகாரங்களே. இரண்டையும் வேற்றுமையின்றி நோக்குவர் விவேகியர். விவேகம் என்பது கஸ்தூரியிடம் நிரம்பி நின்றது. ஆதலால் அம்மாதராளின் மனம் சலிக்கவில்லை ; மாறுபடவில்லை, மங்கவில்லை, ஓடியவில்லை.

இனி, மனையாள் ஆனமுதலே அன்னையின் வாழ்க்கை ஒரே தியாக வடிவந்தான். மேலே சொன்ன ஆங்கிலமாது மீண்டும் மொழியட்டும்: "விவேகம் என்பது கஸ்தூரிபாயிடம் மிகுதி. மனிதரை மதிப்பதில் காந்தியினும் அத் தேவி மேம்பட்டவள். அம்மாதின் தேச பக்தியோ பேசுந்தரமன்று ; தேச பக்தியின் அவதாரம் என்றே சாற்றவேண்டும். மேடை ஏறிப் பேசிப் புகழ் பெறவில்லை. பேனு முனையிலும் கீர்த்திபெறவில்லை. என்றுலும் தேசத்திற்காகச் சர்வசங்கப் பரித்தியாகம் செய்ததைச் சரித்திரம் என்றும் பேசும். உலகம் உள்ளளவும் அக்குணநலம் குலவும் !

ஆனதுக்கு ஓர் ஆகாதது ஆகாததுக்கு ஓர் ஆனது என்று தமிழிலே ஒரு வசனம் உண்டு. அதாவது கருத்தொருமித்த கணவன் மனைவியர் வாய்ப்பது அருமை என்பதாம். உலகப் பெரியார்களிலே பலருக்கு அத்தகைய மனையாள் வாய்க்கவில்லை. உதாரணமாக, கிரேக்க ஞானவான் சோகரதர் என்பாரின் மனைவி சாந்தீபி. இவள் வாய்ப்பட்டி என்று கர்ண பரம்பரைச் செய்தி பேசும். தாறு மாறாகவே பர்த்தாவுடன் நடந்துவந்தாள்.

ஒரு சமயம் சோகரதர் தம் தோழருடன் பேசி நின்றார். என்ன பேச்சு வேண்டிக் கிடக்கிறது என்று அவள் முழக்கினாள்; பினனர் ஒரு குடம் ஜலத்தை எடுத்து அவர் தலையில் கொட்டினாள். அருகே இருந்த தோழர் என்ன இது என்றார். முன்னே இடி இடித்தது, பின்னே மழை பெய்கிறது என்றார் சோகரதர்.

துகாராம் சுவாமிகளின் மனைவி பெயர் ஜிஜாய். அவரோ ஞானப்பித்தர், பக்திப் பித்தர். இதனை ஜிஜாய் உணரவில்லை; உணரவும் சக்தி பெறவில்லை. எனவே இரு வரின் வாழ்க்கையும் இன்பமயமாக விளங்க வில்லை. சழக்கும் சளப்பும் மிகுந்தே காணப் பட்டன.

சித்தார்த்தர் - பின்னாளிலே புத்தர்பிரான் - இளமனைவியையும், மணிமகுடத்தையும் குமரன் போன்ற குமரனையும் விட்டுப் பிரிந்

தார். தேவி யசோதரை அது கண்டு ஆற்ற வில்லை, அழுது அரற்றினாள், ஐயகோ என்று புலம்பினாள்.

ருஷிய ஞானி டால்ஸ்டாய் நம் மகாத்மா வுக்கு ஒரு வகையில் ஞான குரு. அவருடைய வாழ்க்கைத் துணைவியின் பெயர் ஸோபியா. டால்ஸ்டாயின் ஞானதத்துவத்தை அம் மாது அறியவில்லை. அதில் அபிமானங்கொள்ளவில்லை. மற்று வெறுப்பும் விரோதமும் காட்டியே வந்தாள். டால்ஸ்டாய் என்ன நினைத்தார்? இவ்வளவுதான் பிராப்தி என்று விவேகமே கொண்டார்.

காந்திமகானுக்கு வாய்த்த மனையாளோ மங்கையர் திலகம், கற்பின் அணிகலம், தியாகத்தின் வடிவம், பொறுமையின் பூஷணம், அன்பின் அவதாரம், அஹிம்ஸையின் இலக் கணம். அம்மகான் வாக்கு இது:—

"அவளிடம் ஒரு குண நலம் உண்டு; அந் நலம் மிகுதியும் உண்டு. அக்குண நலம் ஹிந்து மனைவியரிடம் ஓரளவே இருக்கும். கஸ்தூரி யிடமோ மிகுதி. அக்குணநலம் என்ன? முழு மனதுடனோ அரை மனதுடனோ ஆழ்ந்த றிந்தோ ஆழ்ந்தறியாமலோ, கணவனின் அடிச் சுவடுகளைப் பின்பற்றி நடந்துவந்ததாம்! இதனை ஒரு பாக்கியமாகவும் அவள் கொண் டாள். புத்தி பூர்வமாக எனக்கும் அவளுக்கும் விரிந்த வேற்றுமை உண்டு. எனினும், நாங்கள்

இருவரும் திருப்தியான, இன்பமான, அன்பான வாழ்க்கையே கொண்டு விளங்கினோம்."

வாசமனையாளைப் பஞ்சணையில்தான் பாராட்டுதல் வேண்டும் என்பர் சிலர். ஆசானைத்தான் எவ்விடத்தும் பகிரங்கமாகப் பாராட்டலாம். காந்தியடிகளோ தம் மனையாளைச் சமயம் நேர்ந்துழிச் சகமறியப் பாராட்டியுள்ளார் என்றால், கஸ்தூரியின் பெருமையை நாம் விரித்துரைக்க வேண்டுமோ?

உலகம் போற்றும் உத்தமரான காந்தியின் குணவிசேஷங்களின் முன்னே, கஸ்தூரியின் குணநலங்கள் தலை தூக்கமுடியவில்லை என்று சிலர் நினைக்கலாம். ஆனால் என்னுடைய பெருமைக்கெல்லாம் அவளே காரணம்; என்னை அவள் இயக்குவதுபோல் வேறெவரும் இயக்கவில்லை என்று அம்மகான் மனம் விட்டு எழுதியிருக்கிறார்.

சென்ற முப்பதாண்டுகளாக இருவரும் பிரம்மசரிய விரதமே பூண்டு நின்றனர். மன ஒருமை ஒன்றுதான் இருவருக்கும் இடையே. அந்த மன ஒருமையே, "என்னுடைய பெருமைக்கெல்லாம் அவளே காரணம்" எனும் சொல் மாலையாக, மலர் மாலையாக வெளிவந்துள்ளது.

முடிவில் ஒரு வார்த்தை. சாவித்திரி இருந்தாள்! யமன் வாயினின்று கணவனை மீட்டாள். ஒரு தரந்தான் மீட்டாள். கஸ்தூரிபாய் எப்படி? அப்பெரியார் ஐந்தாறு முறை உண்ணு

நோன்பு கொண்டார். உண்மையில் நமன் வாயில் புகுந்தார். தேசமெல்லாம் பிரார்த்தனை பண்ணியது கிடக்கட்டும். கஸ்தூரி அன்னையின் பிரார்த்தனையை அக்காலன் கண்டான், கனிவு கொண்டான், கருணை வள்ளலின் உயிரைக் கவரேன் என்றான். இங்ஙனம் ஆறு முறை கணவனுடைய உயிரைக் காத்த தேவி கஸ்தூரி.

அக்கஸ்தூரி மணம இக்காசினி யெங்கும் கமழுமாக !

வந்தே மாதரம்



# என் சரித்திரம் ★

## மகாத்மா காந்தி

— எழுதியது

காந்தியடிகளின் தூய வாழ்க்கை, அவருடைய கபடமற்ற எளிமை, அள வற்ற அன்பு இவை ஆத்ம சரித்திரத்தில் மிளிர்கின்றன. மகாதேவ தேசாய் இந்த நீண்ட சரித்திரத்தைச் சுருக்கித் தக்கபடி பதிப்பித் திருக்கிறார். ஒவ்வொருவரும் படித்து மகிழ வேண்டிய அரிய தத்துவங்கள் அடங் கிய அரிய அழகிய நூல்.

— உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

★ அல்லயன்ஸ் கம்பெனி

மயிலாப்பூர் — சென்னை

Cover Printed at P. A. S. Press, Mount Road Madras